
ISSN 1391-9504

# விஜய்


Vijey විජයි

19.07.2017 - மலர் 14, இதழ் 21

## சுயாதீனப் பத்திரிகையாளராக நீங்கள் தயாரா...?




## இரத்த அழுத்தமும் அதன் பாதிப்புக்களும்



## மிதி வண்டியின் கதை...

விலை ரூபா 15/-


மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசையின் மகத்துவங்கள்







மனித வரலாற்றின் ஆரம்பத்திலிருந்து மனிதனின் தனிமையைப் போக்குவதில் இசை பெரும் பங்காற்றி வருகின்றது. ஒவ்வொரு காலப்பகுதிக்கேற்றவாறு இசையும் மாற்றங்களை எதிர்நோக்கி வருகின்றது. இயற்கையின் அருங்கொடையாகவும் இசையைக் குறிப்பிடலாம். மனிதனில் ஏற்படும் எந்தவோர் உணர்வையும் அரவணைத்துக்கொள்ளும் ஆற்றல் இசைக்கு உண்டு. இத்தனை தனித்துவங்கள் கொண்ட இசையின் மகத்துவங்கள் குறித்து உரையாடல் மூலம் நோக்குவோம்.

ஜீவாவின் குட்டித் தம்பி வீரிட்டு அழ ஆரம்பித்தான். உடனே அவனது தாய், தன் இனிமையான குரலில் தாலாட்டுப் பாட ஆரம்பித்தாள். தாயின் தாலாட்டுப் பாடலில் மெய்மறந்த குட்டித் தம்பி, அமைதியாக உறங்க ஆரம்பித்தான். இதனை அவதானித்துக்கொண்டிருந்த ஜீவா, அவனது வீட்டுக்கு வந்திருந்த தன் தாத்தாவிடம்;

"தாத்தா! இங்கே பாருங்கள்... அம்மா பாடியவுடன் தம்பி அமைதியாக உறங்கி விட்டானே" என்றான்.

அப்போது தாத்தா "ஆமாம்.... அதனால் தானே இசையை சர்வதேச மொழி என்கின்றோம்" என்றார்.

"அப்படியானால் இசையை எல்லோரும் ஒரே விதமாகவா உணருகின்றார்கள்?" என்றான் ஜீவா.

"இல்லை ஜீவா, இசையை ரசிக்கும் விதம் ஒருவருக்கு ஒருவர் வேறுபடுகின்றது. ஒருவரின் அறிவு மட்டம், நடத்தை என்பனவற்றுக்கேற்ப இசை ரசனை வேறுபடும்" என்றார் தாத்தா.

உடனே ஜீவா, "இசை என்பது ஒரு சிகிச்சை முறை ஆகும் என்று நான் கேள்விப்பட்டிருக்கின்றேன். ஆனால், எமது மருத்துவமனைகளில் அவ்வாறான சிகிச்சை முறைகள் எதுவும் கையாளப்படுவதில்லையே?" என்று கூறினான்.

"நீங்கள் சொல்வது சரிதான் ஜீவா. பாடல், இசை, ஆடல் என்பனவற்றினால் மனிதனின் மனதில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும். நாம் மேற்கத்தேய உலகினைப் பார்த்தோமாயின், அப்பலோ என்ற பண்டைய கிரேக்க கடவுள் மருத்துவத்திற்கும் இசைக்கும் அதிபதியாக கூறப்படுகின்றார். பண்டைய கால எகிப்தில் இசையைப் பயன்படுத்தி உளக் கோளாறுகளால் அவதிப்படுபவர்களை குணப்படுத்தியுள்ளார்கள் என்று தாத்தா கூறினார்.

"ஏன் தாத்தா... இசை பற்றிய பெரும்பாலான கதைகள் கிரேக்கத்துடன் தொடர்புடையதாக மட்டுமே உள்ளன?" என்று ஜீவா கேட்டான்.

"என் பேரனே! இசை பற்றிய கீழைத்தேய வரலாற்றுக் கதைகளும் உள்ளன. எனினும், கிரேக்கம் என்பது மனித வரலாற்றில் சிறந்த தத்துவஞானிகளை உருவாக்கிய நாடு, கிரேக்க தத்துவஞானியான பிளேட்டோ, மனித உணர்வுகளிலும் ஒவ்வொருவரினது நடத்தைகளிலும் இசை தாக்கம் செலுத்துவதாக கூறியுள்ளார். இசையினால் உணர்வுகளை கட்டுப்படுத்த முடியும் என்று அரிஸ்டோட்டில் குறிப்பிட்டுள்ளார். ஓடும் நீரின் சத்தமும் மணியோசையும் சில உளவியல் நோய்களுக்கு சிறந்த மருந்தாகும் என்று மற்றுமொரு கிரேக்க தத்துவஞானியான செல்சஸ் குறிப்பிட்டுள்ளார்" என்றார் தாத்தா.

"இசையின் மகத்துவத்திற்கு எல்லையே இல்லைத்தானே. அது எப்படி தாத்தா... பாடலும் இசையும் மனதுக்கு ஆறுதலும் அமைதியும் தருகின்றன?" என்று கேட்டான் ஜீவா.

அப்போது தாத்தா சிரித்துக்கொண்டே, "இசை மனதால் உணரப்படுகின்றது. பாடலை கேட்டு ரசிக்கும்போதும் ஆடலைப் பார்த்து ரசிக்கும்போதும் மனதில் உணர்ச்சி வேறுபாடுகள் எழுச்சி பெற்று இசை மீது கவனம் குவிகின்றது. இந்த மாற்றம் மனதுக்கு ஆறுதலும் அமைதியும் தருகின்றது. இதனால் மனம் புத்துணர்ச்சி பெறுகின்றது" என்று கூறி முடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் பதவிக்கான தரமுயர்த்தலில் இழுபறி



அதிபர் பதவிக்கான தரமுயர்த்தல் தீர்மானத்திற்கு மாகாண முதலமைச்சர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதை அடுத்து ஜனாதிபதி அவர்கள் இந்த விடயத்தில் தலையீடு செய்து பிரச்சினையை தீர்த்து வைக்க வேண்டும் என கல்வித்துறை அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

புதிதாக தரமுயர்த்தப்பட்ட 3,500 அதிபர்கள் பதவியேற்பதை முதலமைச்சர்கள் நிராகரித்து வருவதே, இந்த முட்டுக்கட்டைக்குக் காரணமாக கருதப்படுகின்றது. ஏற்கனவே இடைக்கால அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்களை அப்பதவிகளிலிருந்து நீக்கிவிட்டு புதியவர்களுக்கு வாய்ப்பு வழங்க முதலமைச்சர்கள் மறுத்து வருகின்றனர். ஆனால், இவர்கள் அதிபர் பதவிக்கான உரிய தகுதிகளைக் கொண்டிருக்கவில்லை எனவும், புதிதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளவர்கள் உரிய தகுதியை பெற்றவர்களாக இருப்பதாகவும் கல்வித்துறை அமைச்சர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டியூஷன் மாணவர்களிடம் பணம் பறிக்கும் கும்பல்



கொழும்பு நகரில் சில இடங்களில் மாலை நேர டியூஷன் வகுப்பு முடிந்து வரும் மாணவர்களிடம் சில கும்பல்கள் அச்சுறுத்தி பலவந்தமாக பணம் பெறும் கைங்கரியத்தில் ஈடுபட்டு வருவதாக பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர். இதனால், மாணவர்கள் பலர் பஸ் பயணத்திற்கு வைத்திருந்த பணத்தைக் கூட இந்த கும்பலிடம் இழந்த சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

போதைப் பழக்கத்திற்கு அடிமையாகிய சில மாணவ கும்பல்களே, ஏனைய மாணவர்களிடம் இவ்வாறு பணப் பறிப்பு செயலில் ஈடுபட்டு வருவதாகவும் தெரியவருகின்றது. இத்தகைய சம்பவங்களுக்கு முகம்கொடுக்கும் மாணவர்கள் அருகாமையில் காணப்படும் பொலிஸாரிடமோ அல்லது வயதில் மூத்தோரிடமோ விடயத்தைக் கூறி உதவிபெறத் தயங்க வேண்டாம் என கேட்கப்பட்டுள்ளனர்.

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி
கொழும்பு -02
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652



## இலங்கையில் முதலாவது

# இருதய மாற்று சிகிச்சை

இலங்கையில் முதல் தடவையாக இருதய மாற்று சிகிச்சை முறை வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது. கண்டி போதனா வைத்தியசாலையில் 34 வயதுடைய பெண் ஒருவருக்கு அவசரமாக இருதய மாற்று சிகிச்சை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

இதேவேளை, 24 வயதுடைய இளைஞர் ஒருவர் விபத்தின் காரணமாக, மூளை செயலிழப்பிற்கு ஆளாகியிருந்தார். எனினும், அவரது இருதயம் செயலிழக்காமல் இருந்தமையால் உடனடியாக அவரது இருதயம் 8 மணி நேர மாற்று அறுவை சிகிச்சை மூலம் குறித்த பெண்மணிக்கு வெற்றிகரமாக பொருத்தப்பட்டது. கிட்டத்தட்ட 20 மருத்துவ நிபுணர்களின் பங்களிப்பிலேயே இந்த இருதய மாற்று சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# சிறந்த பாடசாலை சஞ்சிகை தெரிவுப் போட்டி



பாடசாலை மாணவர்களின் ஆக்கபூர்வமான படைப்பாற்றல்கள் மற்றும் ரசனை, திறன் ஆகியவற்றை மேலும் விருத்தி செய்து திறமைமிகு எதிர்கால சந்ததியொன்றை உருவாக்கும் நோக்கில் கல்வி அமைச்சும், கலாசார அலுவல்கள் திணைக்களமும் ஒன்றிணைந்து முன்னெடுக்கும் இளங்கதிர் பாடசாலை கலாசார வேலைத்திட்டத்தின் கீழான பாடசாலை மாணவர்களுக்கான சிறந்த பாடசாலை சஞ்சிகையை தெரிவு செய்யும் போட்டி.....

அச்சு ஊடக அனுசரணை விஜய்

## போட்டி விதிமுறைகள்

இந்தப் போட்டியில் எந்தவொரு பாடசாலையும் கலந்து கொள்ளமுடியும். 2017 ஆம் ஆண்டுக்கென தயாரிக்கப்பட்ட ஆண்டு அல்லது அரையாண்டு பாடசாலை சஞ்சிகையை இப்போட்டிக்கென முன்னெடுக்கமுடியும். மாவட்ட மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்கள் தெரிவுசெய்யப்படவுள்ளது. மொத்தமுள்ள 25 மாவட்டங்களிலும் முதல் இடத்தைப் பெற்ற 25 சஞ்சிகைகளுள் முதல் மூன்று இடத்தைப் பெறும் சஞ்சிகைகள் தெரிவு செய்யப்பட்டு அவற்றிற்கு தேசிய மட்டப் போட்டியில் சான்றிதழ்கள், பரிசுகள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படும். விண்ணப்பப்படிவத்துடன் உரிய சஞ்சிகையும் எமக்கு அனுப்பப்படல்வேண்டும்.

## நிபந்தனைகள்

01. பாடசாலை மட்டத்தில் இப்போட்டியில் பங்குபற்றமுடியும்.
02. மாணவர்களின் சஞ்சிகையை சமர்ப்பிக்க முடியும்.
03. ஆண்டு அல்லது அரையாண்டு பாடசாலை சஞ்சிகையை இதற்கென சமர்ப்பிக்க முடியும்.
04. கையெழுத்துப் பிரதி வடிவிலான சஞ்சிகைகளையும் சமர்ப்பிக்கமுடியும்.
05. உங்கள் பாடசாலைக்கு உரித்துடைய பிரதேச செயலகத்திலோ அல்லது மாவட்ட செயலகத்திலோ உள்ள கலாசாரப் பிரிவு உத்தியோகத்தரிடம் கையளிக்க முடியும்.
06. போட்டி முடிவுத் திகதி 2017 ஒக்டோபர் 15



இளங்கதிர் பாடசாலை கலாசார வேலைத்திட்ட பாடசாலை சஞ்சிகைப் போட்டி
மாதிரி விண்ணப்பப்படிவம்

01. முதலெழுத்துகளுடன் பெயர்:..................
02. பாடசாலை :..................
03. பாடசாலை முகவரி :..................
04. பாடசாலை தொலைபேசி :..................
05. மாவட்டம் :..................
06. பிரதேச செயலகம் :..................
07. சஞ்சிகையின் பெயர் :..................

மேற்குறிப்பிட்ட விபரங்கள் உண்மையெனவும் சரியானவை எனவும் இந்த சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆக்கம் என்னால் தயாரிக்கப்பட்ட ஆக்கம் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

.................................... ....................................
மாணவர் பெயர் கையொப்பம்

எமது பாடசாலையினால் தயாரிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட சஞ்சிகையுடனான போட்டி விண்ணப்பத்தை உறுதிப்படுத்தி சமர்ப்பிக்கின்றேன்.

அதிபரின் பெயர்:..................
கையொப்பம் :..................
பாடசாலை முத்திரை :.................. திகதி:..................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு எப்போது ருசிக்கும்?

ஒரு நாள் மன்னர் ஒருவர் நகர்வலம் சென்றுவிட்டு, அரண்மனை நோக்கித் திரும்பிக்கொண்டிருந்தார். அவரது தாகமும் பசியும் அதிகமாக இருந்தது. கையில் உணவுப் பொருட்களோ, தண்ணீரோ இல்லை. என்ன செய்வது என்று யோசித்துக்கொண்டிருந்தார். அப்போது, எதிரிலிருந்த வீட்டு வாசலில் பெண் ஒருவர் பாத்திரம் தேய்த்துக்கொண்டிருப்பதை கண்டார்.

அந்த வீட்டுக்கு அருகில் சென்று ''அம்மா, குடிக்க ஏதாவது கிடைக்குமா? தாகமாக இருக்கிறது'' என்றார். குரல் கேட்டு நிமிர்ந்தார் வீரம்மாள். ''மன்னா! வணக்கம். என் வீட்டில் சாப்பிடுவீர்கள் என்றால் கேழ்வரகுக் கூழ் தருகிறேன் மன்னா'' என்று தயங்கியபடி கூறினார் வீரம்மாள்.

''என் நிலை அறிந்து கேட்டதற்கு நன்றி. நான் மிகுந்த பசியுடன் இருக்கிறேன். தாங்கள் எது கொடுத்தாலும் சாப்பிடக் காத்திருக்கிறேன்'' என்றார் மன்னர். மகிழ்ச்சியுடன் வீட்டுக்குள் சென்று, ஒரு குவளை நிறையக் கேழ்வரகுக் கூழ் கொண்டு வந்தார் வீரம்மாள். மன்னரும் அதை ஆர்வத்துடன் வாங்கி, பசி தீரும்வரை குடித்தார்.

ஆஹா! என் வாழ்நாளில் இவ்வளவு ருசியான ஒன்றை நான் சாப்பிட்டதே இல்லை. எப்படி வந்தது இவ்வளவு ருசி? இதை எப்படிச் செய்ய வேண்டும் என்று இந்த வீரரிடம் சொல்லுங்கள். நான் அரண்மனைச் சமையல்காரர்களிடம் இதே பக்குவத்தில் சமைக்கச் சொல்கிறேன்'' என்றார். வீரம்மாளும் கேழ்வரகுக் கூழ் செய்யும் பக்குவத்தை வீரர் ஒருவரிடம் கூறினார். அந்த வீரர் அதை அப்படியே அரண்மனையின் தலைமைச் சமையற்காரிடம் கூறினார்.



மறுநாள் காலை கேழ்வரகுக் கூழ் செய்து, மன்னருக்குக் கொடுத்தார் சமையற்காரர். மன்னர் அதை ஆர்வமாக வாங்கிப் பருகினார். ''இது நேற்று நான் பருகியதுபோல இல்லையே? அதே முறைப்படிதான் செய்தாயா?'' என்று சற்றுக் கோபமாகக் கேட்டார் மன்னர்.

''ஆம் மன்னா.'' என பதலளித்தார் சமையற்காரன். ''அப்படியானால், ஏன் அந்தச் சுவை வரவில்லை? வீரம்மாளை உடனே அழைத்து வாருங்கள்'' என கட்டளையிட்டார் மன்னர். சிறிது நேரத்தில் வீரம்மாள் வந்துசேர்ந்தார். ''தவறான செய்முறையைச் சொல்லிக் கொடுத்த குற்றத்துக்கு என்ன தண்டனை தெரியுமா?'' என மன்னர் வீரம்மாளைப் பார்த்து கோபமாகவே கேட்டார்.

வீரம்மாள் சிறிதும் அச்சமின்றி, ''நான் எதையும் மாற்றிக் கூறவில்லை. தாங்கள் அருந்திய கேழ்வரகுக் கூழை எனக்கும் சிறிது தரச் சொல்லுங்கள். நான் உண்ட பின் சொல்கிறேன்'' என்றார். கூழ் வந்தது. பருகிப் பார்த்தார். ''மன்னிக்கவும் மன்னா! இது அதே சுவையில்தான் தயாரிக்கப்பட்டுள்ளது. என்றாலும் இது சுவையாக இல்லை என்று தாங்கள் நினைத்தீர்களானால் அதற்கான மூன்று காரணங்களை என்னால் கூற இயலும்'' என்றார் வீரம்மாள்.

''என்ன காரணங்கள் கூறு பார்க்கலாம்...'' என கேட்டார் மன்னர்.

''மன்னா! 'பசித்த பின் புசி' என்பார்கள். நேற்று தாங்கள் கடுமையான பசியில் இருந்தீர்கள். அந்த நேரம் எதை உண்டாலும் மிகவும் ருசியாக இருக்கும். அதையே பசியில்லாத நேரம் உண்டால் ருசிக்காது. இன்று அந்த அளவு பசித்த பின்தான் இதை உண்டீர்களா என்று எனக்குத் தெரியவில்லை. இரண்டாவது அந்தக் கூழ் என் குடும்பத்துக்காக என் கையால் தயாரிக்கப்பட்டது. அதில் அன்பும் அக்கறையும் அதிக அளவு கலந்திருக்கும். இங்கே பணி செய்யும் சமையல்காரர் தயாரித்த கூழில் அதை எப்படி எதிர்பார்க்க முடியும்? மேலும் வியர்வை சிந்தி உழைத்த பணத்தில் வாங்கப்படும் உணவுப் பொருளுக்கு உள்ள சுவை மற்றவற்றுக்குக் கிடையாது'' என்றார் வீரம்மாள்.

ஆகா! என்ன அருமையான விளக்கம்! என்று பாராட்டி, வீரம்மாளுக்குப் பல பரிசுகளைக் கொடுத்து அனுப்பி வைத்தார் மன்னர்.


# நிலாவைச் சாப்பிடுவது யார்?

அடர்ந்த காடு. காட்டு விலங்குகளின் தலைவனாக இருந்தது ஓநாய். அன்று மாலை அனைத்து விலங்குகளையும் கூட்டத்திற்கு அழைத்தது. ''நீண்ட நாட்களாகவே, எனக்கு ஒரு சந்தேகம். அதைத் தீர்த்துக் கொள்வதற்கே இந்தக் கூட்டம்'' என்றது ஓநாய்.

''நண்பர்களே! வானத்திலிருந்து யாரோ ஒருவர் இரவு நேரத்தில் ஒரு நிலாவை வீசி எறிகிறார். உங்களில் ஒருவர்தான் அதைத் தினமும் கொஞ்சம் கொஞ்சமாகப் பிய்த்துச் சாப்பிடுகிறார். அது யார் என்ற உண்மை எனக்குத் தெரிந்தாக வேண்டும்'' என்றது ஓநாய். இதனால், முதலில் யானையிடம் கேள்வியை ஆரம்பித்தது ஓநாய்.

''உன்னிடம் மட்டுமே நீளமான தும்பிக்கை உள்ளது. நீதான் நிலாவைப் பிய்த்திருப்பாய்'' என்றது ஓநாய்.

''ஐயோ! என் தும்பிக்கையைப் பாருங்கள். விளாம்பழ மரத்தின் உச்சிக் கிளையைக்கூட என்னால் தொட முடியாது. நான் எப்படி வானத்திலுள்ள நிலாவைப் பிடிக்க முடியும்? என்று பதில் சொன்னது யானை.



யானை சொல்வதிலும் உண்மை இருக்கிறது என்று நினைத்தது ஓநாய். சட்டென்று கூட்டத்திலிருந்த ஒட்டகச்சிவிங்கியின் பக்கம் பார்வையைத் திருப்பியது.

அதைக் கவனித்துவிட்ட ஒட்டகச்சிவிங்கி, ''உண்மையில் நான் இரண்டு நாட்களாகக் கழுத்து வலியோடு இருக்கிறேன். என் நீளமான கழுத்தைக்கொண்டு பனை மரத்தின் பச்சை இலைகளைக்கூடப் பறிக்க முடியாதே'' என்றது. ஓநாய்க்கும் ஒட்டகச்சிவிங்கியின் மேல் இருந்த சந்தேகம் தீர்ந்தது. ஆனாலும் நிலாவைப் பிய்ப்பவர் யாரென்று தெரியாமல் குழம்பியது. வானில் வட்டமடித்துக் கொண்டிருந்த பருந்தை, கீழிறங்கி வரச்சொல்லி விசாரித்தது ஓநாய். ''தலைவரே, மேகங்களைக் கிழித்துக்கொண்டு மேல் அடுக்குவரை என்னால் பறக்கவே முடியாதே'' என்றது பருந்து.

யானை, ஒட்டகச்சிவிங்கி, பருந்து இவர்களில் யாரும் நிலாவைப் பிய்த்துச் சாப்பிடுவதில்லை. பின்னர் யார்தான் இந்தக் காரியத்தைச் செய்கிறார்கள் என்ற யோசனையில் ஆழ்ந்திருந்த ஓநாய்க்கு, எதிரில் வந்து நின்றது ஒரு குருவிக் குஞ்சு. ''எல்லோரும் வாருங்கள், யாரோ ஒருவர் நம்மையெல்லாம் ஏமாற்றிவிட்டு, நிலாவைக் கண்காணாத இடத்துக்கு இழுத்துச் செல்கிறார். உடனடியாக நாம் நிலாவைப் பின்தொடர்ந்து சென்றால், அது யாரென்று கண்டுபிடித்து விடலாம்'' என்று அது கூறியது.

இதனையடுத்து, நிலவைத்தேடி காட்டின் மறுபக்கம் இருந்த ஆற்றங்கரைக்கு அனைத்தும் வந்துசேர்ந்தன. அங்கு நிலா கீழே இறங்கியதைப் பார்த்தன. நடக்கப்போவது என்ன என்று அறிந்துகொள்ளும் ஆவலுடன் அனைத்து விலங்குகளும் காத்திருந்தன. அப்போது வானிலிருந்த நிலா, அடிவானில் மறைந்தது. இதனை கண்ட அனைத்து விலங்குகளுக்கும் நிலாவை யாரும் சாப்பிடுவது இல்லை. நிலா தோன்றுவதும் மறைவதும் இயற்கை என்று தெளிவு ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01

# கிரிக்கெட் விளையாடுவோம்

Lifebuoy ACTIV சில்வர்
நலன்காப்புநெறி
நலன்மிகு பிள்ளைப் பருவத்தை முன்னிட்டு




**பரிசு வெல்வதற்கான இவ்வார கேள்வி**

## நலன்காப்பு நெறி என்றால் என்ன?

DSI வழங்கும் தலா ரூபா 2500 பெறுமதியான வவுச்சர்கள் நான்கை வெல்லுங்கள்

கேள்விக்கான சரியான விடையை தபால் அட்டையில் எழுதி கீழ்காணும் முகவரிக்கு தபாலிடுங்கள்.

முகவரி:
நலன்காப்புநெறி கேள்வி - 1
'விஜய்',
த.பெ.இல 2037, கொழும்பு.

நாம் எல்லோரும்





நலன்காப்புநெறி
நலன்மிகு பிள்ளைப் பருவத்தை முன்னிட்டு
பழகிக் கொள்வோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொற்றா நோய்களினால் பெரும் பாதிப்பினை எதிர்நோக்கியுள்ள நாடுகளில் ஒன்றாக இலங்கையை குறிப்பிட முடியும். இதில் பிரதானமாக இருதய நோயினைக் (Cardio Vascular) குறிப்பிட முடியும். இருதயம் சம்பந்தப்பட்ட நோய்களினால் இலங்கையில் பெருமளவான மரணங்கள் நிகழ்கின்றன. இதற்கு காரணமான உயர் இரத்த அழுத்தம் (High blood pressure) பற்றிய தகவல்கள் பற்றி ஆராய்வோம்...




# உயர் இரத்த அழுத்
## பற்றி

## உயர் இரத்த அழுத்தம் பற்றி ஏன் தெரிந்துகொள்ள வேண்டும்?

பிள்ளைகள் மற்றும் இளம் பருவத்தினர் இந்த நோய் பற்றி அறிந்துகொள்வது அவசியமாகும். பிள்ளைகள் மத்தியில் அறிவூட்டுவதன் மூலம் ஓர் ஆரோக்கியமான சமுதாயத்தினை எதிர்காலத்தில் உருவாக்குவதோடு, பிள்ளைகளினூடாக, பெரியவர்கள் மத்தியிலும் விழிப்புணர்வினை ஏற்படுத்த முடியும்.

## உயர் இரத்த அழுத்தம் என்றால் என்ன?


இருதயம் இரத்த குழாய்கள் மூலம் உடலெங்கும் இரத்தத்தினை விநியோகிக்கின்றது. இவ்வாறு இரத்தத்தினை விநியோகிப்பதற்கு அழுத்தம் தேவைப்படுகின்றது. இந்த அழுத்தம்தான் இரத்த அழுத்தம் என்று கூறப்படுகின்றது.

இருதய அழுத்தத்தின் போது இருதயம் சுருங்கி விரியும். சுருங்கும் நிலை அழுத்தம் சிஸ்டொலிக் அழுத்தம் (Systolic pressure) என்று அழைக்கப்படும். இருதயம் விரியும் போது ஏற்படும் அழுத்தம் டயொஸ்டொலிக் அழுத்தம் (Diastolic Pressure) என்று அழைக்கப்படுகின்றது. இதன்போது, ஆரோக்கியமான ஒருவரின் இரத்த அழுத்தம் 120/80 ஆக இருக்கும். இதில் 120 என்பது சுருங்கும் அழுத்தமாகவும் 80 என்பது விரியும் போது ஏற்படும் அழுத்தமெனவும் மருத்துவர்களால் கணிக்கப்பட்டுள்ளது. இதற்கு மாறாக இந்த அளவு 140/90 என்ற அளவினை விட அதிகரிக்கும்போது இதனை உயர் இரத்த அழுத்தம் என்பர்.

இவ்வாறு உயர் இரத்த அழுத்தமானது பல நோய்களுக்கு காரணமாகி விடுகின்றது. இதனால், சாதாரண ஒருவரை விட இரத்த அழுத்தம் அதிகமுள்ளவர்களுக்கு பக்கவாதம் (Stroke) ஏற்படும் வாய்ப்பு 7 சதவீதத்தினால் அதிகரிப்பதுடன், இருதய நோய்கள் ஏற்படும் வாய்ப்பு 30 சதவீதமாக உள்ளது. மேலும் நரம்புகளில் இரத்தஓட்டம் தடைப்படும் (Thrombosis) கோளாறுகள் ஏற்படவும் வாய்ப்பு உள்ளது.



### உயர் இரத்த அழுத்தத்தினால் உடலுக்கு ஏற்படும் பாதிப்புகள்





தலைவலி


கண்கள் செந்நிறமாதல்


தியானம்

ஆரோக்

★ அதி
போ
★ உட
★ மன
★ இரக்
உற
★ இர
★ தவ
★ உப்
★ எண்
உவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இந்நோய் எவ்வாறு ஏற்படுகின்றது?

உயர் இரத்த அழுத்தப் பிரச்சினை உள்ள 5 சதவீதமானவர்களுக்கு சிறுநீரக நோய், நீரிழிவு, ஹோர்மோன்கள் மாறுபாடு என்பன ஏற்படலாம். மற்றும் சில மருந்துகள் காரணமாகவும் இப்பிரச்சினை ஏற்படக்கூடும். எஞ்சிய 95 சதவீதமானவர்களுக்கு உயர் இரத்த அழுத்தம் ஏற்படுவதற்கான சரியான காரணத்தினை கண்டறிய முடிவதில்லை. எனினும் இதற்கு தவறான பழக்கங்களும் ஆரோக்கியத்திற்கு எதிரான உணவுகளும் காரணமாக அமையலாம்.



# தம்
# அறிந்துகொள்வோம்

### ...கியத்திற்கு கேடு விளைவிக்கும் பழக்க வழக்கங்கள்



...கமாகப் புகை பிடித்தல் மற்றும் ...தை மருந்துப் பாவனை.

...ற்பயிற்சியின்மை.

... அழுத்தம்.

...பு உணவுக்குப் பின்னர் விரைவாக ...ங்கச் செல்தல்.

...பு நித்திரையின்மை.

...றான உணவுப் பழக்கம்.

...பு அதிகமான உணவுகள்.

...ணெய் மற்றும் கொழுப்பு அதிகம் ...ள உணவுகள் உட்கொள்ளல்.

★ செயற்கை நிறமூட்டிகள், சுவையூட்டிகள், நீண்ட நாள் வைத்திருக்கக் கூடிய உணவுகளை உட்கொள்ளல்.

★ இரவில் அதிகளவு உணவுகளை உட்கொள்ளல்.



புகை பிடித்தல் மற்றும் போதை மருந்துப் பாவனை தவிர்த்தல்



செயற்கை நிறமூட்டிகள், சுவையூட்டிகள் மற்றும் நீண்ட நாள் வைத்திருக்கக் கூடிய உணவுகளை தவிர்த்தல்

## நோய் அறிகுறிகள்

இந்த நோய் எந்த வயதிலும் ஏற்படலாம். 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் ஆகக் குறைந்தது வருடத்திற்கு ஒரு முறையாவது இரத்த அழுத்தத்தினை பார்த்துக்கொள்ள வேண்டும்.

குறிப்பாக, பின்வரும் அறிகுறிகள் உங்களுக்கு ஏற்பட்டால் மருத்துவரை நாடி இரத்த அழுத்தத்தினை பரிசோதித்துக் கொள்வது சிறந்ததாகும்.

- ☆ தலைவலி
- ☆ மயக்கம் மற்றும் தலைச்சுற்றல்
- ☆ வாந்தி மற்றும் குமட்டல்
- ☆ கண் பார்வைக் குறைபாடு
- ☆ கண்கள் செந்நிறமாக மாறுதல்
- ☆ இதயத் துடிப்பு அதிகரிப்பு
- ☆ சிறுநீருடன் இரத்தம் வெளியேறல்
- ☆ அதிகக் களைப்பு
- ☆ மூக்கிலிருந்து இரத்தம் வழிதல் ஆகியவற்றை அறிகுறிகளாகக் கூற முடியும்.

### தடுக்கும் முறை

- ☆ வருடத்திற்கு ஒரு முறை இரத்த அழுத்தத்தினை பரிசோதித்தல்
- ☆ உப்பு பாவனையை குறைத்தல்
- ☆ உடற்பயிற்சி செய்தல்
- ☆ எண்ணெய் அதிகமுள்ள உணவுகளைத் தவிர்த்தல்
- ☆ அதிக புகைப்பிடிப்பு மற்றும் மதுபான பாவனையை தவிர்த்தல்
- ☆ உடல் எடையைக் கட்டுக்கோப்பாக வைத்துக் கொள்ளல்
- ☆ செயற்கை உணவுகளைத் தவிர்த்தல் (பொதியிடப்பட்ட உணவு வகைகள், இனிப்பு பானங்கள்)
- ☆ மனதில் அமைதி பேணுவதற்காக யோகாசனம் செய்தல்

### உயர் இரத்த அழுத்தத்தால் ஏற்படும் ஆபத்துக்கள்

- ☆ இருதய நோய்கள், சிறுநீரக பாதிப்பு ஏற்படல்
- ☆ இரத்தக் குழாய் பிரச்சினைகளால் பக்கவாதம் ஏற்படல்
- ☆ இரத்தக் குழாய்களில் அடைப்பு காரணமாக, பாதங்களில் காயம் மற்றும் வேதனை ஏற்படல்
- ☆ இளம் வயதில் திடீர் மரணம் ஏற்படல்



### உயர் இரத்த அழுத்தம் ஏற்படுவதை கட்டுப்படுத்தும் வழிகள்

* பெரியவர்கள் ஆண்டுக்கு ஒரு தடவையாவது இரத்த அழுத்தத்தினை கணித்துக் கொள்ள வேண்டும்.
* உயர் இரத்த அழுத்தத்தினை ஏற்படுத்தும் உணவுகளை முற்றாக தவிர்ப்போம்.
* புகைப்பிடிப்பு, மது பாவனையை தவிர்ப்போம்.
* ஆரோக்கியமான வாழ்க்கை முறையை பழகிக் கொள்வோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## (பகுதி-I)


பெயர்: ..............................................


சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.

★ 01, 02, 03, 04 ஆம் வினாக்களில் வழங்கப்பட்டுள்ள கோலத்தை அவதானித்து, வெற்றிடத்திற்கு பொருத்தமான விடையை தருக.

01.


02.


03.


04.


★ ரூ.354.19 ஐ குறியீடுகளில் R. BAC.GS எனக் காட்டலாம் எனின்;

05. ரூ.541.93 ஐ எவ்வாறு காட்டுவீர்?

1. R.ACG.SB 2. R. ACG. GS
3. R. ACS. SG




06. 51 தொடக்கம் 55 வரையுள்ள எண்களை எழுதும்போது இலக்கம் 5 எழுதப்படும் தடவைகள் எத்தனை?

1. 5 2. 6 3. 4

★ △ + △ = 12 எனவும் □ - 5 = △ எனவும் □ + △ = ○ எனவும் தரப்பட்டுள்ளது.

07. □ இற்குப் பொருத்தமான பெறுமானம் யாது?

1. 11 2. 6 3. 17

08. △ + □ + ○ இற்குப் பொருத்தமான பெறுமானம் யாது?

1. 32 2. 33 3. 34

09. சிறுவன் ஒருவன் அச்சம் அடைந்த சந்தர்ப்பத்தைக் காட்டுவதற்கு உகந்த உவமானம் யாது?

1. மான் குட்டி போன்று நடுங்குகின்றான்
2. புறா போன்று ஒலியெழுப்புகின்றான்
3. முயல் போல ஓடுகின்றான்

10. ஆசிரியருக்கு மாணவன் போன்று; மருந்துக்கு ........................

1. பொதுமக்கள் 2. நோயாளி 3. தாதி

11. முயன்றால் வெற்றியீட்டலாம் என்பது;

1. இது எப்போதும் உண்மையாகும்
2. இது பெரும்பாலும் உண்மையாகும்
3. இது ஒருபோதும் உண்மையானதன்று

12. ஒருவரின் பெரும் சொத்தாக கருதுவது யாது?

1. கற்ற கல்வி 2. நற்பண்புகள்
3. வங்கியிலுள்ள பணம்

**(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)**

## (பகுதி-II)

(ஜூலை 12 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

*06)* 5. 30cm
6. 22 ஆண்கள்
7. 19cm
8. 25 மாணவர்கள்
9. தந்தை 30. மகன் 6

*07)*

| | | |
|---|---|---|
| 01. 4 | 06. 1 | 10. 4 |
| 02. 3 | 07. 3 | 11. 1 |
| 03. 1 | 08. 4 | 12. 4 |
| 04. 2 | 09. 4 | 13. 2 |
| 05. 4 | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை அனர்த்தங்கள் சில...



**சுனாமி - Tsunami**

2004 டிசம்பர் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமியினால் சுமார் இரண்டரை லட்சம் பேர் இறந்தனர்.



**வறட்சி - Drought**

1876 ஆம் ஆண்டுகளில் இந்தியாவில் ஏற்பட்ட கடும் வறட்சியினால் இரண்டு கோடி மக்கள் மரணமடைந்தனர்



**வெள்ளம் - Flood**

1931 இல் ஏற்பட்ட வெள்ளத்தினால் சீனாவில் இருபது லட்சம் பேர் மரணமடைந்தனர்.



**காட்டுத்தீ - Wild fire**

1871 ஒக்டோபர் 8 ஆம் திகதி அமெரிக்காவில் ஏற்பட்ட 'பெஷ்டிகோன்' எனும் காட்டுத் தீயின் காரணமாக 2000 பேர் மரணமடைந்தனர்.



**பூகம்பம் - Earthquake**

1556 ஜனவரி 23 ஆம் திகதி சீனாவின் ஷான்கி நகரில் ஏற்பட்ட பூகம்பத்தில் எட்டரை லட்சம் பேர் மரணமடைந்தனர்.



**மண்சரிவு - Land Slide**

1999 டிசம்பர் மாதம் வெனிசுவெலாவில் ஏற்பட்ட மண்சரிவினால் இருபதாயிரம்பேர் மரணமடைந்தனர்.



**எரிமலை - Volcano**

1815 ஆம் ஆண்டில் இந்தோனேஷியாவில் 'டம்போரா' எனும் எரிமலை வெடித்ததில் 90,000 பேர் கொல்லப்பட்டனர்.



**புயல் - Cyclone**

1970 நொவெம்பர் 13 ஆம் திகதி பங்களாதேஷில் வீசிய புயல் காற்றில் இரண்டு லட்சம் பேர் மரணமடைந்தனர்.


விஜய் + தூவானம் இணைந்து வழங்கும் பரிசுப் போட்டி

பிரதி புதன்தோறும் Thoovaanam SMS ஊடாக கேட்கப்படும் பொது அறிவுக் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி தபாலிட்டு ரூபா. 8,000 பெறுமதியான 3 பரிசில்களையும் பெற்றிடுங்கள்.

வாராந்தம் இவ் 3 பரிசில்களையும் வெல்வதற்கான கேள்வியினை அறிந்து கொள்ள → அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்க தொலைபேசியில் Thoovaanam SMS இனை செயற்படுத்திக்கொள்ளுங்கள்

Thoovaanam SMS செயற்படுத்தும் முறை

F Thoovaanam

என Type செய்து 40404 எனும் இலக்கத்திற்கு SMS செய்யவும்

(இச்சேவை முற்றிலும் இலவசம்)

இவ்வார கூப்பன் - 19.07.2017

விடை : ..............................

பெயர் : ..............................

முகவரி : ......................

தொ.பே.இல: ..............................

பாடசாலை : ..............................

..............................

கையொப்பம்

அனுப்ப வேண்டிய முகவரி :

3 பரிசில்கள்
19.07.2017
விஜய்
த.பெ.இல: 2037
கொழும்பு

3 பரிசில்கள் போட்டி - 05.07.2017
விடை: கிரிஸ்
வெற்றியாளர்:
கே.பவகௌசிகா,
50C, 4 ஆம் ஒழுங்கை,
உவர்மலை, திருகோணமலை.

Gift sponsored by:
www.srijob.com








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண் தானம் பற்றிய சில தகவல்கள்



கண் தானம் செய்வதில் உலகில் முதன்மையான நாடாக நம் தாய் நாடான இலங்கை விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. கண் தானத்தின்போது, மனிதனின் கண்ணிலுள்ள கண்மணி மட்டுமே அகற்றப்பட்டு பார்வை தேவைப்படு பவருக்குப் பொருத்தப்படும்.

## கண் தானம் செய்யக்கூடிய தகுதியுடையவர்கள்

- அனைத்து வயதினரையும் சேர்ந்த ஆண், பெண் என இரு பாலரும் கண் தானம் செய்யலாம்.
- மூக்குக் கண்ணாடி அணிந்தவர்களும் செய்யலாம்.
- இரத்த அழுத்த நோயாளிகளும், நீரிழிவு நோயாளிகளும் கண் தானம் செய்யலாம்.
- ஆஸ்துமா போன்ற நோயினால் தாக்கப்பட்டவர்களும் கண் தானம் செய்யலாம்.
- கண் தொடர்பான புற்று நோயால் பீடிக்கப்பட்டவர்களைக் தவிர்த்து ஏனைய புற்றுநோயால் இறந்தவர்களும் கூட கண் தானம் செய்யலாம்.



## கண் தானம் செய்ய முடியாதவர்கள்

- கொடிய தொற்று நோய்களான எய்ட்ஸ், மஞ்சள் காமாலை, கொலரா, விஷக் காய்ச்சல், மூளைக் காய்ச்சல் மற்றும் வெறிநாய்க்கடி ஆகியவற்றால் இறந்தவர்களின் கண்களைத் தானம் செய்யக் கூடாது.



# தெரிந்து கொள்வோம்

டிரகன் புத்தாண்டு எந்த நாட்டில் வருடம்தோறும் கொண்டாடப்படுகின்றது?
**சீனாவில்**





புவியின் தென் திசையை அறிந்துகொள்ள உதவும் உடுத்தொகுதி எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
**தென் சிலுவை உடுத்தொகுதி**

தென் ஆபிரிக்காவின் தேசிய கீதம் எத்தனை மொழிகளில் பாடப்படுகின்றது?
**11 மொழிகளில்**





இலங்கையில் தயாரிக்கப்பட்ட முதலாவது பேசும் திரைப்படம் எது?
**கடவுனு பொருந்துவ**

துருக்கியின் தந்தையெனப் போற்றப்படுபவர் யார்?
**முஸ்தபா கெமால் அத்தாதுர்க்**



காலிக் கோட்டை எப்போது? யாரால் முதன்முதலில் நிர்மாணிக்கப்பட்டது?
**1588இல் போர்த்துக்கேயரால்**



தொகுப்பு: உடுவை பரந்தாமன்

# ஏன்?

**கேள்வி-** தண்ணீர் குழாயிலிருந்து சில சந்தர்ப்பங்களில் கண்ணாடிக் குவளையில் நீர் நிரப்பியவுடன் அந்த நீர் தெளிவின்றிக் கலங்கியது போன்று இருக்கும். அதன் பின்னர் சிறிது நேரத்தில் அந்த நீர் மீண்டும் தெளிவாகியிருக்கும். இவ்வாறு ஏன் நடைபெறுகின்றது?



**பதில்-** குழாய் நீர் அருந்துவதற்கு ஏற்ற விதத்தில் சுத்திகரிக்கப்பட்டு, குளோரின் கலந்த பின்னரே விநியோகிக்கப் படுகின்றது. இவ்வாறு சுத்திகரிக்கும்போது, அதிகளவு குளோரின் மயப்படுத்தல் காரணமாக, உருவாகும் ஒட்சிசன் நீரில் கலந்து, நாம் பெற்றுக் கொண்ட கண்ணாடிக் குவளையினுள் நீர்க் குமிழிகளாக உருவாகின்றன. நீர் தெளிவற்ற இயல்பினை எடுப்பதற்கு காரணம் இந்த குமிழ்களாகும். சிறிது நேரத்தில் குமிழிகள் அகன்றுவிடுவதனால் நீர் மீண்டும் தெளிவடைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் PLUS

# வாழ்வில் கடைப்பிடிப்போம்


நீரை வீணாக்க வேண்டாம்.


பிராணிகளை துன்புறுத்த வேண்டாம்.


சுவர்களில் கிறுக்க வேண்டாம்.


உடலுக்குப் பயிற்சியளிக்கும் விளையாட்டுக்களில் ஈடுபடுங்கள்.


பிறருடன் சண்டையிடாதீர்கள்.



சாப்பாட்டுக்கு முன்னும் பின்னும் கைகளைக் கழுவுங்கள்.


பிறருக்கு தொந்தரவு அளிக்காதீர்கள்.


நகங்களை வெட்டி சுத்தம் பேணுங்கள்.



தலைமுடியை வெட்டிப் பராமரியுங்கள்.

## பாகங்களை வெட்டியெடுத்து சரியான உருவை அமையுங்கள்




## ஓடுள்ள பிராணிகள் சில...

















-நுஸ்ஜீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுவனின் தலைமுடி ....................

இந்த சிறுவன் சிவப்பு, ................................ நிறங்களுள்ள டீ-ஷேர்ட் அணிந்துள்ளான்.

சிறுவனின் .................. நிறம் நீலம்.

சிறுமியின் ................................ நீளமானது.

சிறுமியின் சட்டையில் மூன்று ................................ உள்ளன.

சிறுமி ................................ நிற சப்பாத்துக்களை அணிந்துள்ளாள்.




பாடசாலை மாணவர்களுக்கு நான் மிகவும் பிரயோசனப்படுகின்றேன்.



01. நான் யார்?

................................

02. என்னை எதற்காகப் பயன்படுத்துகின்றீர்கள்?

................................................................

இந்தப் பழ மரத்தில் ஏராளமான பழங்கள் காய்த்துள்ளன. பல நிறங்களிலான பழங்களைக் கொண்டுள்ள அந்த மரம், பார்ப்பதற்கு அழகாக காட்சியளிக்கும். மரத்திலுள்ள பழங்களை உண்பதற்காக, தினமும் கிளிகள், மைனாக்கள், அணில்கள் என பல்வேறு உயிரினங்கள் வருகின்றன.



01. படத்தில் காணப்படுவது எவ்வகை மரம்?

1. மா மரம்
2. பூமரம்
3. பழ மரம்

02. இந்த மரத்தில் காணப்படும் பழங்கள்;

1. ஒரே நிறம் கொண்டவை
2. பல நிறங்களிலானவை
3. ஒரே சுவையுடையவை

03. என்னென்ன உயிரினங்கள் மரத்திற்கு வருகின்றன?

................................................................

04. அவை எதற்காக அந்த மரத்தை நோக்கி வருகின்றன?

................................................................

## சரியான விடையில் '✓' அடையாளமிடுக



கார்

- நீர் வழி
- தரை வழி
- வான் வழி



தீயணைப்பு வாகனம்

- தரை வழி
- நீர் வழி
- வான் வழி




படகு

- தரை வழி
- வான் வழி
- நீர் வழி

-ஜீ-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி: 249



### மேலிருந்து கீழ்

1. பெரிய வெடி குழாய்.
3. தாழம்பூ பூக்கும் செடி. (தலைகீழ்)
4. ஆளுகை. (குழம்பியுள்ளது)
7. நாட்டுப்புற நடனம். (குழம்பியுள்ளது)
8. குழந்தை. (தலைகீழ்)
9. பொருத்து. (தலைகீழ்)
10. ஆயுதமொன்று. (குழம்பியுள்ளது)

### இடமிருந்து வலம்

1. துன்பம்.
2. உபாயம். (மாறியுள்ளது)
4. அத்தாட்சி. (குழம்பியுள்ளது)
5. குழந்தைகள் விரும்பி சாப்பிடுவர்.
6. ஓலையினால் பின்னப்பட்டது.
8. சிறிய வீடுகள் செரிவாக அமைந்துள்ள பகுதி. (மாறியுள்ளது)
9. கடும் கோபம்.

### குறுக்கெழுத்துப் போட்டி: 248

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ப | ரி | 2 கா | ரி | ■ | 3 பா |
| ரி | ■ | ளி | 4 ப | ங் | கு |
| யா | ■ | ■ | 5 வா | கு | க் |
| ரி | ■ | 6 வ | ர | 7 கு | ■ |
| ■ | ■ | 8 ஆ | ம் | ம | க |
| 9 த | ர | ணி | ■ | ம் | ■ |

## குழம்பியுள்ள எழுத்துக்களை ஒழுங்கமைத்து சரியான சொல்லை எழுதுக



u r e t y k


o n e m y k


a j e t c k


g o h t d o


## ஒவ்வொரு சொல்லிலும் விடுபட்டுள்ள பகுதியை எழுதுங்கள்






## பெயரிடப்பட்டுள்ள படங்களை பிரதான படத்தில் இனங்கண்டு நிறந்தீட்டுக




## அறிவுக்கு விருந்து (05.07.2017) விடைகள்







## விடை தருக




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பதுளை சரஸ்வதி தேசிய கல்லூரி மாணவர் தலைவர்களுக்கான சின்னம், சாரணர் சின்னம் வழங்கும் நிகழ்வு மற்றும் பாடசாலைக்கான ஊடகப்பிரிவு அங்குரார்ப்பண நிகழ்வு என்பவற்றோடு பாடசாலைக்கான மேலைத்தேய வாத்தியக் கருவிதொகுதி வழங்கும் நிகழ்வுகள் என்பன அண்மையில் கல்லூரியில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு ஊவா மாகாண சபை உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்க நிர்வாக செயலாளருமான வேலாயுதம் ருத்திரதீபன் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன் மேலும் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(தகவல்: பசறை நிருபர்)





## பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகும் பது/கோணக்கலை தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள்

பசறை கல்வி வலயத்திற்குட்பட்ட பது/கோணக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தில் 2016 ஆம் ஆண்டு கல்வி பொதுத் தராதர உயர்தர மாணவர்கள் கலைப் பிரிவில் பரீட்சைக்கு தோற்றி ஏழு சிறந்த பெறுபேறுகளை பெற்று யாழ்ப்பாணம் இராமநாதன் நுண்கலை பீடம் (சுன்னாகம்) பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ளனர். ராமையா தர்ஷினி, ராம்சிங் ஷருணியா, சந்திரபோஸ் யுஷாந்தினி, திருமாறன் உமாதர்ஷினி, சுப்ரமணியம் நளினி, சுப்ரமணியம் கிஷாந்தினி, நடராஜ் ராதிகா ஆகிய மாணவர்களே, பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகிய மாணவர்களாவர்.

இவர்களுக்கு பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள் உள்ளிட்டோர் தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றனர்.

(தகவல்: என்.மலர்வேந்தன்-நமுனுகுல)

விஜய் விழா உலா
த.பெ.எண் 2037
கொழும்பு



அப்துல்லாஹ் அருஸ்,
அல்முபரக் கனிஷ்ட வித்தியாலயம்,
மல்வானை.

## நீருக்கு சுவை உள்ளதா?

நீருக்கு சுவை இல்லை என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆனால், நீருக்கும் சுவை உள்ளது என்பதை கலிபோனியா தொழில்நுட்ப நிறுவனத்தின் பேராசிரியர் யுஜி ஓகாம் என்பவர் கண்டறிந்துள்ளார்.

அந்தவகையில், சுண்டெலிகள்மீது மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் அவற்றுக்கு இனிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, காரம் போன்ற சுவை உள்ள உணவுகள் கொடுக்கப்பட்டன. இறுதியில் நீர் கொடுக்கப்பட்டது. நீரை அருந்திய சுண்டெலிகள் புத்துணர்ச்சி அடைந்தன. இதன்மூலம் சுண்டெலிகளின் நாக்கில் உள்ள சுவை அரும்புகள் நீரின் சுவையை உணர்ந்ததால்தான் அவை புத்துணர்ச்சி அடைந்தன. அவற்றின் செயற்பாடுகள் தூண்டப்பட்டன என்பது கண்டறியப்பட்டது.



இவ்வாறே, மனிதனும் நீரை அருந்தியவுடன் புத்துணர்ச்சி பெற்று அவனின் செயற்பாடுகள் தூண்டப்படுவதும் இயல்பானதே. அதனால், நாக்கில் உள்ள சுவை அரும்புகள் நீரின் சுவையை உணர்வதாகவும், இதனால்தான் உயிர்கள் புத்துணர்வை அடைவதாகவும் அந்தவகையில் நீருக்கு சுவை உண்டு என தற்போதைய புதிய ஆய்வு கூறுகின்றது.





எல். டிலான்குமார்,
இ/நிவி/ந. மினாட்சியம்மான் வித்தியாலயம்,
எந்தானை.



கே.தர்ஷன்,
சென் மேரிஸ் மத்திய கல்லூரி,
பொகவந்தலாவ.



எஸ்.கலைவாணன்,
இந்து தேசிய கல்லூரி,
புசல்லாவ.



ஜீ.பிரசன்னா,
அடம்பன் மத்திய மகா வித்தியாலயம்,
மன்னார்.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
'விஜய்'
த.பெ.எண் 2037
கொழும்பு




ஸாஃரா அஃரா,
முஸ்லிம் மகளிர் அராபிக் கல்லூரி,
கல்-எலிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 2050 ஆம் ஆண்டில் புதிய மனிதன்

2050 ஆம் ஆண்டளவில் மனிதன் பரிணாம வளர்ச்சியினை அடைந்து, புதிய மனிதன் உருவாகுவான் என்று விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர். இவ்வாறு உருவாகும் மனிதன் புதிய தொழில்நுட்பம், நடத்தை, இயற்கை நிறம் என்பனவற்றின் அடிப்படையில் முற்றிலும் வேறுபட்டவனாக இருப்பான் என்றும் அவர்கள் கருதுகின்றனர்



க்ளோபல் ப்ரேன் இன்ஸ்டிடியூட் ஆய்வு நிறுவனத்தின் விஞ்ஞானிகளே, இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளனர். அவர்களின் கருத்தின்படி, எதிர்வரும் நான்கு தசாப்தங்களில் புதிய மனிதன் உருவாகுவான். அதற்கான மனித பரிணாம வளர்ச்சி தற்போதிலிருந்தே உருவாகிவிட்டது.





## மனித பரிணாமம்

எதிர்கால மனிதனில் ஏற்படும் இந்த மாற்றத்தை, வானரத்திலிருந்து மனிதன் பரிணாமம் அடைந்த அளவுக்கு பெரியதொரு மாற்றமாகவே விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

பரிணாம வளர்ச்சி அடையும் மனிதர்கள் மிகவும் வயதாகும் வரை வாழ்வார்கள். வயது முதிர்ந்த நிலையிலும் குழந்தைகளைப் பிரசவிக்க முடியும். அவர்கள் தமது வீட்டு வேலைகளுக்காக ரொபோக்களைப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

2050 ஆம் ஆண்டளவில் மனிதனின் அதிகபட்ச வயது 120 ஆக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. எதிர்கால மனிதர்களின் பணிகள் யாவும் கணினி மற்றும் இயந்திரங்களினூடாகவும் ரொபோக்களின் மூலமும் மேற்கொள்ளப்படும். இதனால், எதிர்கால மனிதனின் வாழ்க்கை பொழுதுபோக்குகள் நிறைந்ததாகவும் விரும்பிய வேலைகளிலும் கலைகளிலும் ஈடுபடக் கூடியதாகவும் இருக்கும்.




## மூளையின் நிலை

எதிர்கால மனிதனின் மூளையின் அளவும் அதிகரிப்பதனால், உடல் அவயவங்கள் அதிகபட்ச செயற்பாட்டினை காட்டுவதற்கு அதிக சக்தியும் நேரமும் தேவைப்படுகின்றன. இதன் காரணமாக, மனிதன் தனது வாழ்க்கையை மிகவும் வேகமாக முடித்துவிட்டு குறைந்த வயதில் இறப்பதனைவிட, மெதுவாக- நீண்ட காலத்திற்கு வாழ வழியேற்படும் எனக் கூறப்படுகின்றது.

உங்கள் அபிமான

தமிழ் Mirror

திங்கள் முதல் வெள்ளிவரை

தினசரி தேசிய பத்திரிகையாக வெளிவருகிறது

விலை Rs. 10/=

wijeyanewspapers helping shape opinions
the SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ் Mirror www.tamilmirror.lk

விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන්
ஆயுபோவன்
**வணக்கம்**

**இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மீன் வியாபாரிக்கும் இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.**

මාළු වෙළෙන්දා: එන්න නෝනා. මාළු ලාභයි. අලුත් මාළු.
என்ன நோனா. மாலு லாபய். அலுத் மாலு.
**மீன் வியாபாரி: வாருங்கள் அம்மா. மீன் இலாபம். புதிய மீன்.**

අම්මා: මොන මාළු ද තියෙන්නේ?
மொன மாலு த தியென்னே?
**அம்மா: என்ன மீன் இருக்கிறது?**

මාළු වෙළෙන්දා: කෙලවල්ලෝ තියෙනවා. සාලයෝ තියෙනවා. ඉස්සෝ තියෙනවා. තලපත් තියෙනවා.
கெலவல்லோ தியெனவா. சாலயோ தியெனவா. இஸ்ஸோ தியெனவா. தலபத் தியெனவா.
**மீன் வியாபாரி: சூரை இருக்கிறது. சாலை இருக்கிறது. இறால் இருக்கிறது. தலபத் இருக்கிறது.**

අම්මා: කෙලවල්ලෝ කීයද?
கெலவல்லோ கீயத?
**அம்மா: சூரை என்ன விலை?**

මාළු වෙළෙන්දා: කෙලවල්ලෝ කිලෝ එක රුපියල් 800යි (අටසීයයි).
கெலவல்லோ கிலோ எக ருப்பியல் அட்டசீயய்.
**மீன் வியாபாரி: சூரை ஒரு கிலோ 800 ரூபாய்.**

අම්මා: හරි ගණන්නේ.
ஹரி கணன்னே.
**அம்மா: அதிக விலையே.**

දුව: අම්මේ! අපි ඉස්සෝ ගමුකෝ.
அம்மே! அப்பி இஸ்ஸோ கமுகோ.
**மகள்: அம்மா! நாங்கள் இறால் வாங்குவோமே.**

අම්මා: ඉස්සෝ කීයද?
இஸ்ஸோ கீயத?
**அம்மா: இறால் என்ன விலை?**

මාළු වෙළෙන්දා: ඉස්සෝ ග්‍රෑම් 500 (පන්සීය) රුපියල් 350යි (තුන්සිය පනහයි).
இஸ்ஸோ க்ரேம் 500 (பன்சீய) ருப்பியல் துன்சிய பனஹய்.
**மீன் வியாபாரி: இறால் 500 கிராம் 350 ரூபாய்.**

අම්මා: මට ඉස්සෝ 500ය (පන්සීයයි), සාලයෝ මාලු 500ය (පන්සීයයි) දෙන්න.
மட்ட இஸ்ஸோ பன்சீயய், சாலயோ மாலு பன்சீயய் தென்ன.
**அம்மா: எனக்கு இறால் 500 உம் சாலை மீன் 500 உம் தாருங்கள்.**

**பயிற்சி**

**சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

1. என்ன மீன் இருக்கிறது?
   ..............................
2. சூரை இருக்கிறது.
   ..............................
3. இறால் என்ன விலை?
   ..............................




**Are எனும் நிகழ்கால துணை வினைச்சொல் வினா வாக்கியத்தில் கையாளப்படும் முறை**

அ) They are waiting for the bus.
அவர்கள் பஸ்ஸுக்காக காத்துக்கொண்டு இருக்கிறார்கள்.
(உடன்பாடு வாக்கியம்-Affirmative Sentence)

**குறிப்பு: மேற்படி உடன்பாடு வாக்கியத்தில் காணப்படுகின்ற 'are' எனும் துணை வினைச்சொல், அதே வாக்கியத்தின் முன்னிலையில் இடம்பெறுகின்றபோது, அவ்வாக்கியம் பின்வருமாறு 'வினா' நிலை வாக்கியமாக மாற்றமடைகின்றது.**

ஆ) Are they waiting for the bus?
அவர்கள் பஸ்ஸுக்காக காத்துக்கொண்டு இருக்கிறார்களா?
(அவர்கள் பஸ்ஸுக்காகவா காத்துக்கொண்டு இருக்கிறார்கள்?)
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

★ They are waiting.
அவர்கள் காத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

★ Are they waiting?
அவர்கள் காத்துக்கொண்டு இருக்கிறார்களா?

★ **இவ்வாறே ஏனைய வாக்கியங்களையும் அவதானிப்போம்:**

இ) They are cooking rice and curry.
அவர்கள் சோறும் கறியும் சமைத்துக்கொண்டு இருக்கிறார்கள்.
(உடன்பாடு வாக்கியம்-Affirmative Sentence)

ஈ) Are they cooking rice and curry?
அவர்கள் சோறும் கறியும் சமைத்துக்கொண்டு இருக்கிறார்களா?
(அவர்கள் சோறும் கறியுமா சமைத்துக்கொண்டு இருக்கிறார்கள்?)
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

★ They are cooking.
அவர்கள் சமைத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

★ Are they cooking?
அவர்கள் சமைத்துக்கொண்டு இருக்கிறார்களா?

உ) They are sleeping under the tree.
அவை மரத்தின் கீழ் உறங்கிக்கொண்டு இருக்கின்றன.
(உடன்பாடு வாக்கியம்-Affirmative Sentence)

ஊ) Are they sleeping under the tree?
அவை மரத்தின்கீழ் உறங்கிக்கொண்டு இருக்கின்றனவா?
(அவை மரத்தின் கீழா உறங்கிக்கொண்டு இருக்கின்றன?)
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

★ They are sleeping.
அவை உறங்கிக்கொண்டு இருக்கின்றன.

★ Are they sleeping?
அவை உறங்கிக்கொண்டு இருக்கின்றனவா?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2020 ஆம் ஆண்டு ஜப்பானில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்கான ஒலிம்பிக் சுடர் ஏற்றுதலை பறக்கும் மோட்டார் காரொன்றில் சென்று மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டு வருகின்றது.

## 2020 ஒலிம்பிக் சுடரை ஏற்றவுள்ள பறக்கும் வாகனம்




'டொயொட்டா' நிறுவனத்தின் 30 பேரைக் கொண்ட இளம் பொறியியலாளர் குழுவினர் ஒன்றிணைந்து 2014 ஆம் ஆண்டில் பறக்கும் வாகனமொன்றை உருவாக்கினர். 'காட்டிவேட்டர்' என அழைக்கப்படும் இக்குழுவினர் உருவாக்கிய இந்த வாகனத்திற்கு 'ஸ்கை டிரைவ்' என பெயரிடப்பட்டது. சில தினங்களுக்கு முன்னர் இந்த பறக்கும் வாகனம் வெற்றிகரமாக பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. மேலும், சில வலுவேற்றல்களை செய்த பின்னர் 2020 ஆம் ஆண்டு ஒலிம்பிக் தீப்பந்தத்தை இந்த வாகனத்தில் சென்றே ஏற்றக்கூடியவாறு அமைக்கப்பட்டுவிடும் என டொயொட்டா நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## 'ஃபிபா' கிண்ணம் ஜேர்மனிக்கு



ஜேர்மனி முதற்தடவையாக 'ஃபிபா' கால்பந்தாட்ட கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது. ரஷ்யாவின் புனித பீட்டர்ஸ் பேர்க் நகரில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் சிலி அணியை 1-0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்ததன் மூலமே, ஜேர்மனி 'ஃபிபா' செம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது. இதன்படி, இப்போட்டியில் இரண்டாம் இடம் சிலிக்கு கிடைத்ததுடன், மூன்றாம் இடம் போர்த்துக்கல் நாட்டிற்கு கிடைக்கப்பெற்றது.

விஜய் ஸ்போர்ட்ஸ்




## இந்திய அணியின் விபரம்

இலங்கையில் இந்திய-இலங்கை அ ணிகளுக்கிடையே கிரிக்கெட் தொடர்கள் நடைபெறவுள்ளது நாம் அறிந்ததே. இதில் இந்திய டெஸ்ட் அணியில் இடம்பெறும் வீரர்களின் பெயர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் ரோஹித் ஷர்மாவிற்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளமையும், ஹர்திக் பான்டயா அணியில் இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. டெஸ்ட் அணியின் விபரம் வருமாறு;

விராத் கோஹ்லி, முரளி விஜய், ராகுல், புஜாரா, ரஹானே, ரோஹித் ஷர்மா, அஷ்வின், ஜடேஜா, சஹா, இஷாந்த் ஷர்மா, யாதவ், பான்டயா, புவனேஷ்வர், சமி, குல்தீப் யாதவ், அபினவ் முகுந்.

## இந்திய அணியின் பயிற்றுனராக ரவி சாஸ்திரி ஒப்பந்தம்

இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்றுனராக முன்னாள் கிரிக்கெட் வீரர் ரவி சாஸ்திரி நியமிக்கப்பட்டுள்ளார். முன்னைய பயிற்றுனர் கும்ப்ளே பதவி விலகியதையடுத்தே, ரவி சாஸ்திரி இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். செவாக், டொம்முடி, ரவி சாஸ்திரி உட்பட 10 பேர் இப்பதவிக்கு விண்ணப்பித்திருந்தனர். இதில் 6 பேர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டதுடன், அவர்களுள் ரவி சாஸ்திரி தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## மெஸ்ஸியின் ஒப்பந்த காலம் நீடிப்பு





'பெர்ஸிலோனா' கால்பந்தாட்ட அணியின் நம்பிக்கை நட்சத்திரமான லயனல் மெஸ்ஸி அவ்வணியுடனான ஒப்பந்த காலத்தை மேலும் நீடிப்பதற்கு சம்மதம் தெரிவித்துள்ளார். இதன்படி, பெர்ஸிலோனா அணியுடனான மெஸ்ஸியின் ஒப்பந்த காலம் 2021 ஆம் ஆண்டுவரை நீடிக்கப்படவுள்ளது.

13 வயதில் பெர்ஸிலோனா அணியில் இணைந்த மெஸ்ஸி தற்போது 30 ஆவது வயதிலும் அதே அணியின் சார்பாக விளையாடி வருகின்றார். 2004 ஆம் ஆண்டு தொடக்கம் பெர்ஸிலோனா அணியின் சார்பாக மெஸ்ஸி 507 கோல்களைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயாதீன





எழுத்தாற்றல் மிக்கவர்களினால் சிறந்ததொரு பத்திரிகையாளராக வர முடியும். இதர பணிகளைவிட பத்திரிகையாளர் பணி மிகவும் சிறப்பு வாய்ந்தது. பத்திரிகையாளர்களை முழுநேர பத்திரிகையாளர், சுயாதீன பத்திரிகையாளர் என இரு வகைப்படுத்தி நோக்கலாம். பத்திரிகை நிறுவனம் ஒன்றில் முழுநேரமாக பணியாற்றாது சுயாதீனமாக பத்திரிகை நிறுவனத்துடன், இணைந்திருப்பவர்களே 'சுயாதீனப் பத்திரிகையாளர்' என்று கூறப்படுகின்றனர். வேறு தொழிலில் ஈடுபடும்போதும் சுயாதீனப் பத்திரிகையாளராகப் பணியாற்ற முடியும். இதனால் பல சமூக தொடர்புகள் ஏற்படும். எழுத்தாற்றலை மேம்படுத்திக்கொள்வதன் ஊடாக, சுயாதீனப் பத்திரிகையாளராக பணியாற்றுவதற்கு நீங்களும் வாய்ப்பினை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

## சுயாதீனப் பத்திரிகையாளர்கள் ஏன் தேவைப்படுகின்றார்கள்?

பத்திரிகை நிறுவனத்தின் நிரந்தர பத்திரிகையாளர்களின் செலவீனத்தினைக் குறைப்பதே இதற்கான முதல் காரணமாகும். இதனால்தான் சுயாதீனப் பத்திரிகையாளர்களின் சேவையினைப் பெறுவதற்கு பத்திரிகை நிறுவனங்கள் விரும்புகின்றன.

பலதரப்பட்ட ஆற்றல் மிக்க பத்திரிகையாளர்களின் சேவையைப் பெற விரும்புகின்றமையை இரண்டாவது காரணமாக கூறலாம். இதனால் பத்திரிகைகளுக்கு புதிய சிந்தனைகள் கொண்ட - பலதரப்பட்ட துறைகளில் ஆற்றல் கொண்ட சேவையினைப் பெறுவதற்கான சந்தர்ப்பம் கிட்டுகின்றது.






## யாரால் சுயாதீனப் பத்திரிகையாளராக முடியும்?

எழுத்தாற்றல் மிக்க எவரும் ஆர்வம், அர்ப்பணிப்பு என்பனவற்றுடன், பத்திரிகை துரைசார் பயிற்சியும் பெற்றிருந்தால் சுயாதீனப் பத்திரிகையாளராக முடியும். பெரும்பாலான பத்திரிகையாளர்கள் முதலில் ஒரு சுயாதீன பத்திரிகையாளராகவே தமது பணியினை ஆரம்பித்துள்ளனர். பாடசாலை காலம் முதல் பத்திரிகைகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு அதன் மூலம் அனுபவங்களை வளர்த்துக் கொண்ட புதிய எழுத்தாளர்களே, சுயாதீனப் பத்திரிகையாளர்களாக உள்ளனர். வேறு பணிகளில் ஈடுபடும்போதும் கல்விகற்கும் போதும் சுயாதீனப் பத்திரிகையாளராக பணியாற்ற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.


## சுயாதீனப் பத்திரிகையாளரினால் எதனை எழுத முடியும்?

தனது விருப்பத்திற்கேற்ப விரும்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ப் பத்திரிகையாளராக ...ங்கள் தயாரா?



விடயத்தினை அல்லது துறையினை தெரிவுசெய்து அது பற்றி எழுத முடியும். உதாரணமாக: விளையாட்டு, இலக்கியம், கல்வி, சமூக நிகழ்வுகள் ஆகிய துறைகள் பற்றி கட்டுரைகள், ஆவணக் கட்டுரைகள், பத்திகள், நேர்காணல்கள் என்பவற்றையும் பத்திரிகைகளில் எழுத முடியும். ஒரு விசேட துறையினை தெரிவுசெய்து அதில் சிறப்பு ஆற்றலினைப் பெற முடியும். இதனால் மிகப் பெரிய முக்கியத்துவத்தினைப் பத்திரிகை உலகில் நீங்கள் பெற முடியும். மேலும், ஒரு துறையினை தெரிவுசெய்து ஆழமாகக் கற்றுத் தெளிவடையும் வாய்ப்பும் இதன்மூலம் கிட்டும்.

## எதற்கு முதலிடம்?

வாசகர்களின் ஆர்வம் குறித்து பத்திரிகையாளர்கள் அவதானம் செலுத்த வேண்டும். பத்திரிகையில் பிரசுரமாகும் விடயங்கள், வாசகர்களிடையே வாசிக்கும் ஆர்வத்தினை ஏற்படுத்துவதாக அமைய வேண்டும். அத்துடன், சமூகத்திற்கு பயன் தரும் விடயமாகவும் இருத்தல் வேண்டும்.

## பதிவு செய்யப்பட்டுள்ள பத்திரிகைகளும் சஞ்சிகைகளும்

இலங்கை பத்திரிகை சங்கத்தினால் இலங்கையில் வெளியாகும் அனைத்துப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதன்படி 2017ஆம் ஆண்டில் வார, நாளாந்த, மாத சஞ்சிகைகள் என்று சுமார் 159 வெளியீடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## பிரஜைகள் ஊடகவியலாளர்

கைத்தொலைபேசியில் உள்ள தொழில்நுட்ப வசதிகள் காரணமாக, தற்போது பொதுமக்களில் பெரும்பாலானவர்களிடம் கெமராக்கள் உள்ளன. ஸ்மார்ட் தொலைபேசிகள் காரணமாக, இணையத்தளத்தில் பிரவேசிப்பதும் இலகுவாக உள்ளது. இதனால் படங்களையும் காணொளிகளையும் இலகுவாக இணையத்தில் பதிவேற்றி உலகுக்கு தெரியப்படுத்தக்கூடியதாக உள்ளது. இந்த அடிப்படையில் சாதாரண மக்களும் ஊடகங்களுக்கு தகவல்களையும்




செய்திகளையும் புகைப்படங்களையும் அனுப்புவதன் காரணமாக, இவர்களை பிரஜைகள் ஊடகவியலாளர்கள் என்று அழைக்கின்றனர்.

## பத்திரிகை ஒன்றினை தெரிவு செய்தல்

எந்தப் பத்திரிகையில் பணியாற்ற வேண்டும் என்பதை சுயாதீனப் பத்திரிகையாளரே, தெரிவுசெய்துகொள்ள வேண்டும். விரும்பினால் ஒன்றுக்கு மேற்பட்ட பத்திரிகை நிறுவனங்களிலும் சுயாதீனப் பத்திரிகையாளராகப் பணியாற்ற முடியும்.

## பத்திரிகை ஆசிரியர்களுடன் தொடர்பு

சுயாதீனப் பத்திரிகையாளராக வர வேண்டுமாயின், பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளின் ஆசிரியர்களுடன் தொடர்புகளைப் பேணுவது அவசியமாகும். இதன்மூலம் தமது ஆற்றலை அவர்களுக்கு தெரியப்படுத்த முடியும். தன்னால் எழுதப்பட்ட ஆக்கமொன்றை தெரிவுசெய்யப்பட்ட பத்திரிகைக்கு அல்லது சஞ்சிகைக்கு அனுப்ப முடியும். அல்லது பிராந்திய பத்திரிகை ஆசிரியர் அல்லது விசேட பத்திரிகை ஆக்கங்களுக்கு பொறுப்பானவருக்கு அனுப்ப முடியும். அல்லது தெரிவுசெய்யப்பட்ட பத்திரிகை நிறுவனத்திற்கு சென்று அங்குள்ள பத்திரிகையாளர்களை சந்தித்தும் ஆக்கங்களைக் கையளிக்கலாம். எந்த வழிமுறையை பின்பற்றிய போதிலும் இங்கு நீங்கள் எழுதிய பத்திரிகை ஆக்கமே முக்கியத்துவம் பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.



## ஆக்கத்துடன் புகைப்படம்

சுயாதீனப் பத்திரிகையாளரிடம் சிறந்த புகைப்படக் கருவி இருப்பது அவசியமாகும். ஸ்மாட் தொலைபேசியில் எடுக்கப்படும் படங்களும் பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு பொருத்தமானதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிதிவண்டியின் கதை!

எரிசக்தியின் உதவி இல்லாமல் எமது உடல் சக்தியைப் பயன்படுத்தி செலுத்தக்கூடிய மிதிவண்டியானது, எமது உடலின் பல நோய்களைக் கட்டுப்படுத்துவதில் முக்கிய பங்களிப்பை செய்வதாக ஆய்வாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இது தவிர, தற்காலத்தில் உலகெங்கும் மோட்டார் வாகனங்களின் எரிபொருளால் வளிமண்டலம் மாசடைந்து வரும் நிலையில், அதனைக் குறைக்கும் மாற்றீடாகவும் இந்த மிதிவண்டிகளே திகழ்கின்றன.

**மிதிவண்டிகளுக்கு 200 வருடங்கள்**


ஜேர்மனியரான பரோன் கால் அவர்களால் உலகிற்கு மிதிவண்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டு, 2017 ஜூன் மாதம் 12 ஆம் திகதியுடன் 200 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளன



### 1869
பெரிஸ் நகரினுள் முதன்முதலாக மிதிவண்டிக்கான காப்புரிமையை பியரே லாலேமெனட் என்பவர் பெற்றார்.







### 1870
இயூஜின் மெயெர் என்பவரால் கம்பி ஸ்போக் உடன்கூடிய சில்லுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அதேபோல் பெனி-ஃபார்திங் எனும் உயரமான சில்லுடன்கூடிய மிதிவண்டி அறிமுகமாகியது.

### 1870-75
பிரெஞ்ச்-ரஷ்ய யுத்தத்தின் காரணமாக, மிதிவண்டி உற்பத்தி வீழ்ச்சி அடைந்தது. பின் உயர்ந்த சில்லுடன்கூடிய மிதிவண்டி வகை புகழ்பெற்றது.



### 1869
ஆசனத்தில் அமர்ந்து செல்லும் வகையிலான மிதிவண்டிகளை தோமஸ் மெக்கோல் என்பவர் உருவாக்கினார்.



பெனி-ஃபார்திங் எனும் இத்தகைய பழமையான மிதிவண்டிகள் இன்றும் பாவனையில் உள்ளன.

### 1863
மிதிவண்டியின் முன் பக்கச் சில்லில் பொருத்தப்பட்ட பெடலுடன்கூடிய 'பொன்ஷேகர்' வடிவ மிதிவண்டிகள் புகழ்பெற்றதோடு, விற்பனையும் பெருமளவு அதிகரித்தன.



நவீன மவுன்டன் வகை மிதிவண்டி



### 1879
ஹென்ரி லோசன் அவர்களால் பின்புறச் சில்லுடன் பொருத்தப்பட்ட சங்கிலி (Chain) உடன்கூடிய புதிய வகை மிதிவண்டி அறிமுகப்படுத்தப்பட்டது.



### 1890
'சேஃப்டி பைசிக்கல்' (Safety Bicycle) எனும் இரு சம அளவிலான சில்லுகளைக் கொண்ட மிதிவண்டிகள் மக்கள் மத்தியில் புகழ்பெற்றன.






### 1842
உலகின் முதலாவது மிதிவண்டியினால் ஏற்பட்ட விபத்து பிரித்தானியாவில் பதிவாகியது.



### 1839
ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த கிரிக்பெட்ரிக் மெக்மிலன் என்பவரால் இயந்திர உபகரணத்துடன் கூடிய இரு சக்கர மிதிவண்டி தயாரிக்கப்பட்டது.



### 1819
ஹொப்ஹோர்ஸ் மிதிவண்டிகள் லண்டனில் புகழ் பெற்றன.





### 1818
பாரோனின் எண்ணக் கருவானது, பல்வேறு தரப்பினரால் பரீட்சிக்கப்பட்டது. இதற்கமைய, லண்டனைச் சேர்ந்த டெனிஸ் ஜோன்சன் என்பவர் வித்தியாசமான மிதிவண்டியை உலகிற்கு அறிமுகப்படுத்தினார்.



### 1817
ஜேர்மனியரான பாரொன் கால் வொன் ட்ராய்ஸ் என்பவரால் முதன் முதலாக மிதி வண்டி அறிமுகப்படுத்தப்பட்டது. அது 'ஹொப் ஹோர்ஸ்' என அழைக்கப்பட்டது.

### 1893
அமெரிக்காவில் வர்த்தகத் துறையில் ஏற்பட்ட மோதலுடன் மிதிவண்டியின் உற்பத்தி தடைப்பட்டது.




### 1900 முதல்
உலகில் போக்குவரத்து தேவைகளுக்காக மோட்டார் வாகனங்கள் வந்தமையால் மிதிவண்டி சிறுவர்களின் விளையாட்டுப் பொருட்களாக மாறின.




### 1903
பிரான்ஸிய புகழ்பெற்ற 'ருவர் டி ஃபிரொன்ஸ்' எனும் மிதிவண்டி ஓட்டப் போட்டி ஆரம்பமாகியது.




### 1993
மின்சார மோட்டார் ஒன்றின் உதவியுடன், ஓடக்கூடிய மிதிவண்டி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் வேகம் மணிக்கு 20 மைல்களாகும்.

### 1924
'சார்ள்ஸ் மொஷெட்' அவர்களால் மிதிவண்டியை சுற்றி வளைத்து தயாரிக்கப்பட்ட உலோக மூடியுடன் கூடிய 'வெலோக்கார்' உலகிற்கு அறிமுகப் படுத்தப்பட்டது.



### 1905
பிரான்ஸின் மிதிவண்டி சவாரியின் தந்தை என கருதப்படும் போல் டி விங் அவர்களால் துரிதமான செயற்பாட்டிற்காக மிதிவண்டியின் பின்புறத்தில் விசேட கருவி ஒன்றை பொருத்தினார்.





### 2017
ஐரோப்பாவில் பெரும்பாலான நாடுகளில் பெருந்தெருக்களில் மிதிவண்டிகளுக்கென ஓடுபாதை பகுதி தனியாக ஒதுக்கப்பட்டுள்ளது.



### 1977
முதல்முறையாக 'மவுண்டன் பைக்' எனும் மிதிவண்டி அறிமுகமாகியது.



noolaham.org | aavanaham.org

# பிரான்ஸ்

ஐரோப்பாவில் அமைந்துள்ள பிரான்ஸ் அந்நாட்டின் நிலப்பரப்பிற்கு மேலதிகமாக லத்தீன் அமெரிக்காவில் பிரெஞ்ச் கினியாவையும் கரீபியன் வலயத்தில் சில தீவுகளையும் இந்து சமுத்திரத்தில் ஒரு தீவையும் தென் ஆபிரிக்காவுக்கருகில் அமைந்துள்ள ஒரு தீவையும் சொந்தமாகக் கொண்டுள்ளது. கி.பி. 843 ஆம் ஆண்டில் பிரெஞ்ச் முடியரசு உதயமாகியதோடு, 1792 ஆம் ஆண்டில் குடியரசாக மாறியது. பிரான்ஸின் இன்றைய அரசியலமைப்பானது, 1958 ஆம் ஆண்டு முதல் அமுலில் உள்ளது.

## தலைநகரமும் பெரிய நகரமும்



நவநாகரிக அலங்காரங்களுக்கு இங்குள்ள பெரிஸ் நகர் புகழ்பெற்றது.

## தேசிய குறியீடுகள்



தேசிய பறவை - கெல்லிக் ருஸ்டர் எனும் காட்டு சேவல்
தேசிய மலர் - ஐரிஸ் மலர்

## இனங்கள்




இதற்கு மேலாக செலிடிக், லத்தீன், டியூடொகின், ஸ்லெவிக், வட ஆபிரிக்கர், இந்து சீனர், பெஸ்கியூ இனத்தவர்கள் சிறியளவில் வாழ்கின்றனர்.

**மொழி** பிரெஞ்ச் மொழி 100%

**சமயம்**
- ரோமன் கத்தோலிக்கம் 83-88%
- புரட்டஸ்தாந்து கிறிஸ்தவம் 2%
- யூத மதம் 1%
- இஸ்லாம் 05-10%
- ஏனையவை 4%

## அரசியல்



ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன்



பிரான்ஸின் நாடாளுமன்றக் கட்டடம்.




டுவர் டி பிரான்ஸ் சைக்கிள் ஓட்டப்போட்டி, பிரான்ஸின் பகிரங்க டெனிஸ் போட்டி என்பன இங்கு முதல்தர விளையாட்டுக்களாகும்.

பாரம்பரிய உடை.

பிரான்சிய ஃபிரேங் மற்றும் யூரோ என்பன இந்நாட்டின் நாணய அலகுகளாகும்.

தானிய செய்கை, மாடு வளர்ப்பு, சீஸ் உற்பத்தி, திராட்சை பயிர்ச்செய்கை, உயர்ரக வைன் உற்பத்தி ஆகியவை இங்கு மேற்கொள்ளப்படுகின்றன.



நவீன வாகனங்கள், இயந்திர உபகரணங்கள், தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் இரசாயனப் பொருட்களும் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன.

## இயற்கை வளம்

நிலக்கரி, இரும்பு, பொக்சைட், துத்தநாகம், யுரேனியம், ஆசனிக், பொறறாசியம் மற்றும் ஜிப்சம்



இங்குள்ள பிரெஞ்ச் இலக்கியம், திரைப்படம், கலை முதலிய கலாசார அம்சங்கள் உலகில் புகழ் பெற்றவை.

நவீன போக்குவரத்து வசதிகளை கொண்டுள்ளன.

மொனாலிசா ஓவியம் வைக்கப்பட்டுள்ள லுவர் அருங்காட்சியகம்

சுற்றுலாத்துறை முதலிடத்தை வகிக்கின்றது.

பல அரச மாளிகைகளை இங்கு காணலாம்.

---

# கலை மற்றும் கலாசாரம் வீடியோ படைப்புகள்

ஊடக அனுசரணை: விஜய்

**பாடசாலை மாணவர்களின் ஆக்கபூர்வமான படைப்பாற்றல்கள் மற்றும் ரசனைத் திறன் ஆகியவற்றை மேலும் விருத்தி செய்து திறமைமிகு எதிர்கால சந்ததியொன்றை உருவாக்கும் நோக்கில் கல்வி அமைச்சு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஒன்றிணைந்து முன்னெடுக்கும் இளங்கதிர் பாடசாலை கலாசார வேலைத்திட்டத்தின் கீழான பாடசாலை மாணவர்களுக்கான கலை மற்றும் கலாசாரம் சார்ந்த வீடியோ படைப்புகள் தொடர்பான தெரிவுப் போட்டி.....**

சிறிது சிறிதாக அருகிப்போகும் சமூக கலாசார விழுமியங்களை சிறுவர்களுக்கு தெளிவுப்படுத்துதல் மற்றும் எமது அறநெறி, மனித பார்வை, ஏனைய கலாசாரத்திற்கு கௌரவமளித்தல், மத நம்பிக்கைகளை ஏற்படுத்துதல், என்பன இதன் முக்கிய கருப்பொருளாகும். அதன்படி மேற்குறிப்பிட்ட துறைகளுக்கு ஏற்றவாறு 03 தொடக்கம் 05 நிமிடங்களுக்குள் வீடியோப் படைப்பு ஒன்றை தயாரித்து மேற்படி போட்டிக்கு சமர்ப்பிக்க முடியும்.



இந்தப் போட்டி மாவட்டம் மற்றும் தேசிய மட்டங்களில் 02 கட்டங்களாக நடைபெறும். மாவட்ட மட்டத்தில் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது இடங்களைப் பெறும் வெற்றியாளர்களின் படைப்புகளுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன், விசேட திறமையைக் காட்டும் வீடியோ தயாரிப்பாளர்களுக்கு திறமைக்கான சான்றிதழ்கள் வழங்கப்படும்.

தேசிய மட்டப் போட்டிக்காக 25 மாவட்டங்களிலிருந்தும் தலா சிறந்த ஒரு படைப்பு வீதம் 25 படைப்புக்கள் தெரிவு செய்யப்படும். மேற்படி படைப்புக்கள் அடங்கிய DVD இறுவட்டு விமர்சையாக வெளியிட்டு வைக்கப்படும்.

## நிபந்தனைகள்

I. இந்தப் போட்டிகள் பாடசாலை மாணவர்களுக்கு மாத்திரம் நடைபெறும் என்பதுடன், ஒரு மாணவருக்கு ஒரு போட்டியில் மாத்திரமே பங்குபற்றமுடியும்..

II. விண்ணப்பப்படிவம் மற்றும் ஆக்கம் அடங்கிய CD என்பன பாதுகாப்பாக எமக்குக் கிடைக்கும்படி செய்யவேண்டும்.

III. குறுந் திரைப்படம் 03 நிமிடங்கள் தொடக்கம் 05 நிமிடங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

IV. 2017 ஜூலை 25 ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து ஆக்கங்களும் பாடசாலைக்கு அருகில் உள்ள பிரதேச செயலகத்திலோ அல்லது மாவட்ட செயலகத்திலோ பணியாற்றும் கலாசார உத்தியோகத்தரிடம் கையளித்தல் வேண்டும்



## இளங்கதிர் பாடசாலை கலாசார வேலைத்திட்டம்

### குறுந் திரைப்பட போட்டிக்கான மாதிரி விண்ணப்பப்படிவம்

1. முதலெழுத்துகளுடன் பெயர்: ..........................................
2. பாடசாலை: ..........................................
3. பாடசாலை முகவரி: ..........................................
   ..........................................
4. தொலைபேசி:
   பாடசாலை: .......................... வீடு: ..........................
5. மாவட்டம்: ..........................................
6. பிரதேச செயலகம்: ..........................................
7. படைப்பின் காலம் (நிமிடம்): ..........................................

மேற்குறிப்பிட்ட விடயங்கள் உண்மையெனவும் சரியானதெனவும் இங்கு சமர்ப்பிக்கப்பட்ட படைப்பு என்னால் தயாரிக்கப்பட்ட படைப்பு என்பதையும் சான்றுப்படுத்துகின்றேன்.

பெயர்: ..........................................

கையொப்பம்: ..........................

மேல் பெயர் குறிப்பிட்ட மாணவன்/ மாணவி.......................... .......................... பாடசாலையில் .......................... தரத்தில் கல்வி கற்பவர் என்பதுடன், இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள குறுந் திரைப்பட ஆக்கம் மாணவன்/மாணவியினது சுய படைப்பு என்பதுடன், மேற்குறிப்பிட்ட தகவல்கள் உண்மையெனவும் மற்றும் சரியானதெனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

வகுப்பு ஆசிரியரின் பெயர்: ..........................................

ஒப்பம்: ..........................

போட்டி விண்ணப்பப்படிவத்தை சான்றுப்படுத்தி சமர்ப்பிக்கின்றேன்.

.......................... ..........................
(அதிபரின் கையொப்பம்) (திகதி)
(அதிபரின் பதவி முத்திரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மின்சார அனர்த்தங்களை தவிர்ப்போம்

வீட்டில், சுற்றுப்புறத்தில், பாடசாலையில் ஆகிய இடங்களில் மின்சார அனர்த்தங்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் தொடர்பாக நீங்கள் அறிவீர்களா? இவற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்வது தொடர்பான சுவரொட்டியொன்றை வடிவமைத்து பணப்பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களை வெல்லுங்கள்.

## நாடளாவிய சுவரொட்டி (போஸ்டர்) போட்டி...!



வீட்டில், சுற்றுப்புறத்தில் அல்லது பாடசாலையில் ஏற்படக்கூடிய மின்சார அனர்த்தங்கள் தொடர்பாக நீங்கள் அறிவீர்களா? மின்சார அனர்த்தங்களிலிருந்து தற்காத்துக்கொள்வதற்கு நாம் அனைவரும் தெளிவை பெறல் வேண்டும். அத்துடன் அவற்றை தவிர்ப்பதற்கு, அவற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதும் நம் அனைவரதும் கடமையாகும்.



**இப் போட்டியில் 6, 7, 8, 9, 10, 11 என 5 பிரிவுகளின் கீழ் வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்படுவர்.**

### சகல பிரிவுகளிலும் வெற்றி பெறுவோரில்...

முதலாவது இடத்திற்கு - ரூ 25,000
இரண்டாவது இடத்திற்கு - ரூ 15,000
மூன்றாவது இடத்திற்கு - ரூ 10,000

நான்காவது இடம் தொடக்கம் பத்தாவது இடம்வரை பெறுவோருக்கு பெறுமதியான பரிசில்கள். ஒவ்வொரு பிரிவிலும் தலா சிறந்த 200 சித்திரங்கள் வீதம் என 05 பிரிவிலும் மொத்தமாக தெரிவாகும் 1000 சித்திரங்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

### சித்திரத் தலைப்பு

மின்சார அனர்த்தத்தை பிரதிபலிக்கச் செய்கின்ற அல்லது அதிலிருந்து பாதுகாப்பைப் பெறுவது தொடர்பாக எடுத்துக்காட்டுகின்ற எந்தவொரு கருத்தையும் உங்கள் படைப்பிற்கு தலைப்பாகக் கொள்ள முடியும்.

### போட்டி விதிமுறை/ நிபந்தனைகள்

* தலைப்பின் கீழ் ஒருவர் ஆகக்கூடியது 03 படைப்புகளை மாத்திரமே அனுப்ப முடியும்.
* போட்டிக்கு அனுப்பப்படும் அனைத்து சுவரொட்டிகள் (போஸ்டர்கள்) 18 x 14 அங்குலம் அளவுடையதாக இருத்தல் வேண்டும்.
* பெஸ்டல் அல்லது நீர்ச்சாயம் போன்ற கையில் ஒட்டிக் கொள்ளாத எந்தவொரு நிறப் பூச்சையும் பயன்படுத்த முடியும்.

சித்திரத்தின் பின்புறம் போட்டியாளரின் பெயர், பாடசாலை, பாடசாலை முகவரி, வகுப்பு, பிறந்த திகதி, வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம், மாவட்டம் மற்றும் மாகாணம், கையொப்பம் ஆகியன போன்ற விபரங்கள் அடங்கலாக பாடசாலை அதிபரின் அல்லது பிரிவுத் தலைவர் அல்லது வகுப்பு பொறுப்பாசிரியரின் உறுதிப்படுத்தல் அடங்கலாக கீழ்காணப்படும் முகவரிக்கு தபாலிட வேண்டும். அல்லது நேரில் வந்து கையளிக்கவும் முடியும்.

(தயவு செய்து உங்கள் விரபங்களை தெளிவாக எழுதுங்கள். ஆங்கிலத்திலும் எழுதினால் நல்லது)

**போட்டி நடுவர் குழுவின் முடிவே இறுதி முடிவாகும்.**

ஏற்பாடு: இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு...
மின்சாரத் தொழிற்றுறையின் பொருளாதார, தொழினுட்ப, பாதுகாப்பு ஒழுங்குறுத்துனர்.

**தபாலிட வேண்டிய முகவரி:**

**மின் விபத்தை தவிர்ப்போம்,
'விஜய்'
த.பெ.இல. 2037,
கொழும்பு.**

மேலதிக விபரங்களுக்கு
எஸ்.கிருஷாணந்த்
077-9900344

---

# எமது உலகம் சிறுவர் கதை நூல் ஆக்கம்

ஊடக அனுசரணை: விஜய்

பாடசாலை மாணவர்களின் ஆக்கபூர்வமான படைப்பாற்றல்கள் மற்றும் ரசனை திறன் ஆகியவற்றை மேலும் விருத்தி செய்து திறமைமிகு எதிர்கால சந்ததியொன்றை உருவாக்கும் நோக்கில் கல்வி அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம் ஒன்றிணைந்து முன்னெடுக்கும் இளங்கதிர் பாடசாலை கலாசார வேலைத்திட்டத்தின் கீழான பாடசாலை மாணவர்களுக்கான சிறந்த சிறுவர் கதை நூலுக்கான தெரிவுப் போட்டி.....



### போட்டி விதிமுறைகள்:

மாவட்ட மட்டத்தில் பாலர், கனிஷ்ட, சிரேஷ்ட ஆகிய 03 பிரிவுகளில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தனித் தனியாக போட்டிகள் நடாத்தப்படும். மேற்குறித்த பிரிவுகளில் கிடைக்கப்பெறும் ஆக்கங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு முதலாவது, இரண்டாவது, மூன்றாவது இடங்கள் தெரிவுசெய்யப்படும். மேலும், மாவட்ட மட்டத்தில் விசேட திறமை காண்பிக்கும் ஆக்கத்தினை தெரிவுசெய்து அதற்கு சான்றிதழ் வழங்கப்படும். மாவட்ட மட்டத்தில் முதலாவது இடத்தினை பெறும் படைப்பு தேசிய மட்டப் போட்டிக்காக சமர்ப்பிக்கப்படும்.

அது தவிர, மாவட்ட மட்டத்தில் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்படும் சிறுவர்களுக்கு பயிற்சிப் பட்டறை நடாத்தப்பட்டு அவர்களின் படைப்பாற்றலை மேலும் விருத்தி செய்யும் வேலைத்திட்டங்கள் நடைபெறும். தேசிய மட்டப் போட்டிக்கென தெரிவாகும் 25 மாவட்டங்களையும் சேர்ந்த படைப்புக்கள் நூல் வடிவில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் அச்சிடப்பட்டு, 2017 ஒக்டோபர் 01 ஆம் திகதியன்று உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு நூலினை கல்வி அமைச்சு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பவற்றினால் வெளியிட்டு வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.



### போட்டி நிபந்தனைகள்:

i. அனைத்து சிறுவர் நூல்களும் 16 பக்கத்திற்கு மேலாக இருத்தல் வேண்டும். (ஒரு பக்கத்தின் அளவு A4 அளவாக இருத்தல் வேண்டும்)
ii. போட்டியில் பாடசாலை மாணவர்கள் மாத்திரமே பங்குபற்ற முடியும்.
iii. சமர்ப்பிக்கப்படும் போட்டிப் பிரிவுகளின் வயதெல்லை
  * பாலர் பிரிவு (தரம்-1 தொடக்கம் தரம்-5வரை)
  * கனிஷ்ட பிரிவு (தரம்-6 தொடக்கம் தரம்-9 வரை)
  * சிரேஷ்ட பிரிவு (தரம்-10 தொடக்கம் தரம்-13 வரை)
iv. தேசிய அல்லது சர்வதேச நூல்களை மொழிபெயர்த்தல், தழுவல் அல்லது முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ பிரதிபண்ணல் கூடாது.
v. சிங்களம், தமிழ், ஆங்கிலம் மொழிகளில் வெவ்வேறாக போட்டிகள் நடாத்தப்படும்.
vi. படைப்புக்கள் உங்கள் பாடசாலைக்கு உரித்துடைய பிரதேச செயலகத்தில் அல்லது மாவட்டச் செயலகத்தில் உள்ள கலாசார உத்தியோகத்தரிடம் கையளித்தல் வேண்டும்.

**போட்டி முடிவு திகதி 2017 ஜூலை 25**

## இளங்கதிர் பாடசாலை கலாசார வேலைத்திட்டம்

**சிறுவர் கதை ஆக்கம் - மாதிரி விண்ணப்பப்படிவம்**

1. முதலெழுத்துகளுடன் பெயர்: ..................
2. பாடசாலை: ..................
3. பாடசாலை முகவரி: ..................
..................
4. தொலைபேசி:
பாடசாலை: .................. வீடு: ..................
5. மாவட்டம்: ..................
6. பிரதேச செயலக பிரிவு: ..................
7. படைப்பு சமர்ப்பிக்கப்படும் மொழி: ..................
8. சமர்ப்பிக்கப்படும் போட்டிப் பிரிவு
(பாலர்/ கனிஷ்ட/ சிரேஷ்ட) ..................
பெயர் .................. தரம் ..................
கதையாக்கம் ..................
கையொப்பம்: ..................

மேற்குறிப்பிட்ட இந்த விண்ணப்பப்படிவத்துடன், சமர்ப்பிக்கப்பட்ட சிறுவர் கதைப் படைப்பு .................. மாணவன்/ மாணவியுடையது என்பதுடன், மேற்குறிப்பிட்ட தகவல்கள் அனைத்தும் உண்மையெனவும் மற்றும் சரியானதெனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

வகுப்பு ஆசிரியரின் பெயர்: ..................

ஒப்பம்: .................. திகதி: ..................

போட்டி விண்ணப்பப்படிவத்தை சான்றுப்படுத்தி சமர்ப்பிக்கின்றேன்.

.................. ..................
(அதிபரின் கையொப்பம்) (திகதி)
(அதிபரின் பதவி முத்திரை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிக்கு 434 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்கும் உலகின் மிகவும் வேகமான கார்



**அமெரிக்க கார் உற்பத்தி நிறுவனமான ஹெனசி 'Hennessey' எனும் நிறுவனம் Venom GT என்ற காரை உற்பத்தி செய்துள்ளது. உலகில் அதிக வேகத்தினைக் கொண்ட காராக இந்தக் காரை இந்த நிறுவனம் அறிவித்துள்ளது. இதற்கு முன்னர் உலகின் வேகமான வாகனமாக Bugatti Veyron சுப்பர் ஸ்போர்ட்ஸ் கார் கருதப்பட்டமை குறிப்பிடத்தக்கது.**

## பரீட்சார்த்த ஓட்டம்

நாஸா நிறுவனத்திற்குரிய விண்கலங்கள் தரை இறங்கும் ஓடு தளத்தில் இந்த Venom GT வாகனத்தினை ஒரு முறை பரீட்சித்துப் பார்ப்பதற்கு இந்நிறுவனத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. இந்த பரீட்சார்த்த ஓட்டத்தில் இந்த கார் மணித்தியாலத்திற்கு 270.49 கி.மீ வேகத்தில் பயணித்திருந்தது. 2010 ஆம் ஆண்டில் புகாட்டி வேரன் சுப்பர் ஸ்போர்ட்ஸ் வாகனம் பதிவு செய்திருந்த அதிகபட்ச வேகமான மணித்தியாலத்திற்கு 269.86 கி.மீ வேகத்தினைவிட இது அதிகமாகும்.

## அதி வேகம்

இது பற்றி topgear.com என்ற இணையத்தளத்திற்கு கருத்து தெரிவித்திருந்த Venom GT வாகனத்தினை செலுத்தியிருந்த பரீட்சார்த்த ஓட்டுனர் "இந்த வாகனத்தை இன்னும் அதிக வேகத்தில் செலுத்தியிருக்க முடியும். ஆனால், இந்த ஓடு தளத்தின் நீளம் 3.22 மைல்களாக மட்டுமே இருந்தமையால் என்னால் அதனை விட வேகமாக செலுத்த முடியவில்லை" என்று கூறினார்.



## கின்னஸ் குழுவின் அறிவிப்பு

Venom GT கார் பயணிக்கும் வேகமானது, ஐக்கிய இராச்சியத்தில் உள்ள சாலைப் போக்குவரத்து வேக எல்லையினைவிட நான்கு மடங்கு அதிகமாகும். அதேபோல், அமெரிக்காவின் சாலைகள் வேக எல்லையினைவிட மூன்று மடங்கு அதிகமாகும். எனினும் இது ஒரு சாதனையாக கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெறவேண்டுமெனில், இந்த வாகனத்தை இதே வேகத்தில் இரு தடவைகள் கின்னஸ் குழுவிடம் செலுத்திக் காட்ட வேண்டும். ஆனால், நாஸா நிறுவனம் இந்த வாகனத்தை இந்த வருடத்தில் ஒரு தடவை செலுத்துவதற்கு மட்டுமே அனுமதி அளித்துள்ளது. எதிர்வரும் ஆண்டில் மறுபடியும் அனுமதி பெற்று, இந்த வாகனத்தை செலுத்தி காண்பிக்கப்பட்ட பின்னர்தான் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் அதிக வேகம் கொண்ட வாகனமாக Venom GT வாகனம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என கின்னஸ் குழு தெரிவித்துள்ளது.



### வேனெம் ஜிடி

Venom GT வாகனத்தின் பெறுமதி 8 லட்சம் பவுண்கள். பரீட்சார்த்த ஆய்வின் போது இவ்வாகனம் 2.7 செக்கன்களில் மணித்தியாலத்திற்கு 2.7 கி.மீ வேகத்தினை கொண்டிருந்தது. இந்த வாகனம் புளோரிடா ஓடு தளத்தில் மணித்தியாலத்திற்கு 20 கி.மீற்றரிலிருந்து 120 வரை வேகத்தினை அதிகரிப்பதற்கு 7.71 செக்கன்கள் மட்டுமே தேவைப்பட்டது.


### உலகின் மிக வேகமான முதல் பத்துக் கார்கள்

01. ஹெனசி வேனெம் ஜிடி- மணித்தியாலத்திற்கு 434 கி.மீ
02. புகாட்டி வேரன் சுப்பர் ஸ்போர்ட்ஸ்- மணித்தியாலத்திற்கு 431 கி.மீ
03. கொனிக்செக் அகேரா ஆர்- மணித்தியாலத்திற்கு 418 கி.மீ
04. எஸ்எஸ்சி அல்ட்டிமேட் ஏரோ, 9 எப் எப் ஜிரி 9- ஆர் வாகனங்கள் - மணித்தியாலத்திற்கு 413 கி.மீ
05. செலின் எஸ் 7 டிவின் டர்போ- மணித்தியாலத்திற்கு 399 கி.மீ
06. கொனிக்செக் சீசீஎக்ஸ்- மணித்தியாலத்திற்கு 394 கி.மீ
07. மெக்லரன் எவ் 1- மணித்தியாலத்திற்கு 386 கி.மீ
08. சென்வோ எஸ்டி 1- மணித்தியாலத்திற்கு 374 கி.மீ
09. பாகானி ஹுவைரா- மணித்தியாலத்திற்கு 370 கி.மீ
10. கும்பர்ட் அபோலோ, நோபல் எம் 600 இரண்டு வாகனங்களும்- மணித்தியாலத்திற்கு 362 கி.மீ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகளான ஜோர்ஜ் வொஷிங்டன், தோமஸ் ஜெஃபர்சன், தியோடர் ரூஸ்வெல்ட் மற்றும் ஆபிரஹாம் லிங்கன் ஆகியோரின் முகங்கள், கருங்கற்பாறையில் செதுக்கப்பட்டுள்ள இடம்தான் 'மவுண்ட் ரஷ்மோர் தேசிய நினைவிடம்' ஆகும். இது, ஐக்கிய அமெரிக்காவின் சௌத் டகோடா மாநிலத்திலுள்ள ப்ளெக் ஹில்ஸ் மலைத்தொடரில் அமையப்பெற்றுள்ளது. சௌத் டகோடாவின் சுற்றுலாத்தளமாக ப்ளெக் ஹில்ஸ் மலைப் பகுதியை மாற்ற வேண்டும் என்ற யோசனை வரலாற்றாசிரியரான டோன் ரொபின்சனுக்குத் தோன்றியதை அடுத்தே, முன்னாள் ஜனாதிபதிகளின் சிற்பங்களை அங்கு செதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.





# மலையில் செதுக்கப்பட்ட அமெரிக்க ஜனாதிபதிகள்

அதற்கமைய, கட்சன் போர்க்லம் என்ற சிற்பி 1927 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 400 இற்கும் மேற்பட்ட பணியாளர்களுடன் இணைந்து இந்த சிற்பங்களை செதுக்க ஆரம்பித்துள்ளார். 1941 ஆம் ஆண்டில் செதுக்கல் பணிகள் நிறைவடைந்துள்ளன. இங்குள்ள ஒவ்வொரு சிற்பமும் 60 அடி உயரம் கொண்டது. 1,278.45 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்த நினைவிடத்தைப் பார்வையிடுவதற்காக வருடந்தோறும் சுமார் 2 மில்லியன் சுற்றுலாப்பயணிகள் வருகை தருகின்றனர்.

இன்றைய காலத்தில் இயர்ஃபோன் மற்றும் ஹெட்ஃபோன்களை பயன்படுத்துவோரை அதிகம் காணலாம். இயர்ஃபோன், ஹெட்ஃபோன் போன்றவற்றை தொடர்ந்து

# இயர்ஃபோன் அணிவதால் பெக்டீரியாக்கள் அதிகரிக்கும்!

பயன்படுத்துவதன்மூலம் காதுகளில் தீங்கு விளைவிக்கும் பெக்டீரியாக்களின் வளர்ச்சி அதிகரிப்பதாக ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது. அத்துடன், நம்மில் பலர்






இயர்ஃபோன் மற்றும் ஹெட்ஃபோன்களை ஒருவருக்கு ஒருவர் பரிமாற்றிக்கொள்வதும் உண்டு. இவ்வாறு செய்வதன் மூலம் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு பெக்டீரியாக்கள் தொற்றிக்கொள்ளும் ஆபத்தும் ஏற்படுகின்றதாம்!



# தாஜ் மஹால் நிர்மாணிப்பின்போது...

உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்ற தாஜ் மஹால், முற்றிலும் பளிங்குக் கற்களினால் கட்டப்பட்ட மாளிகையாகும். தாஜ் மஹாலை நிர்மாணிப்பதற்காக ஆப்கானிஸ்தான், சீனா, சவூதி அரேபியா போன்ற வெளிநாடுகளிலிருந்தும் பளிங்குக் கற்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. இந்த பணிகளின்போது, கட்டுமானப் பொருட்களை குறித்த இடத்திற்கு எடுத்து வருவதற்காக சுமார் ஆயிரம் யானைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன், இந்த மாளிகை நிர்மாணிப்பில் மொகலாய, இந்திய, பாரசீக மற்றும் இஸ்லாமிய கட்டடக் கலைகள் பின்பற்றப்பட்டுள்ளன.



# கழுதையை முத்தமிடல்

கழுதையை முத்தமிடுவதன்மூலம் பல் வலியைக் குணப்படுத்திக்கொள்ளலாம் என்று பண்டைய கால ஜேர்மனிய மக்களிடையே நம்பிக்கை நிலவியுள்ளது.



இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதியிலுள்ள விஜய பத்திரிகை நிறுவனத்தினால் 2017, ஜூலை 19 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday July 19 , 2017.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org